REGD M 4642

# திராவிடநாடு

விலை அணு 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 8—8—48 | இதழ் 8

# வேண்டவே வேண்டாம்.

( நாட்டுப்பாடல் மெட்டு )

இந்திச்சனியன் வருகுதுங்க
எழுந்துவாருங்க!

செந்தமிழ் மந்தையில் பூருதுங்க
திரண்டு வாருங்க!! (இந்திச்)

மண்டல மெல்லாம் ஆண்ட தமிழ்மொழி
மறுகி நிக்குதுங்க,

அண்டையிலுள்ள பண்டைமொழிகள் வாய்
அடைச்சு நிக்குதுங்க (இந்திச்)

இந்தி—உருது இருதலைப் பாம்பு
எட்டிச் சீறுதுங்க

குந்திக்கொண்டு வடமொழிச் சனியன்
கூடப் பீறுதுங்க (இந்திச்)

ஆரியர் மறைவில் இருந்து காட்டுறார்
அது தான் தானமுங்க

அரசியல் ஆரிய வடவர் ஆட்டுறார்
அது தான் ஆட்டமுங்க (இந்திச்)

அவநாசியாரு அவரு சொன்னரு
கட்டாய மில்லையுங்க

நவநாசியாரு நடுப்போ சொல்றாரு
கட்டாயந் தானுமுங்க (இந்திச்)

தற்குறி போக்க, தமிழ் எங்கும் பரப்ப,
பணமில்லை எங்கிறாங்க

தகுதியில்லாத தடங்கெட்ட இந்திக்கு
தட்டிக் கொளிக்கிறாங்க (இந்திச்)

சூத்திரப்பயலுவ சுட்டாலும் வாராது,
சோக்குடா! எங்குறாங்க

ஆத்திரப்படுறாங்க இந்தி வேண்டாமின்னா
அரசாள வந்தவங்க (இந்திச்)

தாத்தாக்களான நம் பாட்டாக்கள் பேசிய
தமிழ் மொழி போதுமுங்க

வேத்தாள் ஆட்சியும் வேத்தாள்கள் மொழிகளும்
வேண்டவே வேண்டா முங்க (இந்திச்)

**கா. அப்பாதுரை எம். ஏ. (தமிழ்)**

எம். ஏ. (ஆங்கிலம்) எல். டி; & விசாரத் (இந்தி)

# ஆங்கிலம் இருந்த இடத்தில் இந்தியாம்!

ஆங்கிலேயர்கள் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேலாகவே நம் நாட்டை ஆண்டார்கள். ஆண்டார்கள் என்றால், நாட்டை மட்டும் அவர்கள் ஆளவில்லை. நம்மையும் ஆண்டார்கள். நம்மையும் ஆண்டார்கள் என்று கூறும்போது, ஒரு நாட்டை ஆள்பவர்கள் என்றால், அந்நாட்டு மக்களை ஆள்பவர்கள் என்றுதானே பொருள், இதில், நாட்டை ஆண்டார்கள்—நம்மையும் ஆண்டார்கள் என்று பிரித்துக் கூறுவதில் என்ன பொருள் இருக்கிறது என்று சிலர் நினைக்கக் கூடும். இந்த நினைப்பைச் சிலர் கொள்வதற்குக் காரணமாக இருந்தது ஆங்கில ஆட்சி முறைதான். நாம், நம்மை ஆள்வதற்கும், பிறர் நம்மை ஆள்வதற்கும் இடையே உள்ள வேறுபாட்டைக் கூட நம்மிற் பலரால் அறிந்துகொள்ள முடியாத அளவுக்கு ஆங்கில ஆட்சிமுறை நம்மை ஆட்டிப் படைத்துக்கொண்டிருந்தது சுருங்கச்சொல்லவேண்டுமானால், ஆட்சி முறையால் ஏற்படும் நலன்கள், ஆள்பவர்களுக்கா அல்லது ஆளப்படுபவர்களுக்கா என்பதைக் கூடப் பலரால் அறிந்து கொள்ளமுடியாதபடி ஆங்கிலேயர் தங்கள் ஆட்சிமுறையை 'அழகாக' அமைத்துக் கொண்டிருந்தனர்.

ஆங்கிலேயர் மட்டும் நம்மை ஆளவில்லை. அவர்களுடைய மொழியும் நம்மை ஆண்டது—ஆண்டு கொண்டிருக்கிறது—இன்னும் ஆளும்—ஆளவேண்டும்—ஆளத்தான் போகிறது என்று ஆங்கிலேயர்களை விரட்டியவர்களே துணிந்து கூறும் அளவுக்கு ஆங்கிலமொழி இங்கே இடம்பெற்று வேரூன்றி விட்டது. அடுப்பங்கரையில் இருந்து அரசமன்றம்வரை ஆங்கிலமொழி இங்கு ஆட்சி புரிகின்றது. ஆங்கில அரிச்சுவடி தெரியாதவர்களைக்கூட அது அடிமைப்படுத்தி விட்டது. பட்டணங்களில் இருப்பவர்களை மட்டுமல்ல, பட்டிக்காடுகளில் இருப்பவர்களைக்கூட ஆங்கிலம் தன்வயப் படுத்திவிட்டது. புகைவண்டி நிலையம் என்றால் அதன் பொருள் அறியாத பலருக்கு ரயில்வேஸ்டேஷன் என்றால் என்ன என்பது நன்குதெரியும். இவ்வாறே, டிரைவர், கண்டக்டர், கார்ட், டிக்கட் கலெக்டர், டிக்கட், எஞ்ஜின், கார், பஸ், சயிக்கில், ஏரோப்ளேன், ரிக்ஷா, பென்சில், பேப்பர், சிலேட், நீட், லேட், மிஸ்டேக், பிஸ்கட், மார்க்கட், ரோட், லயிட், ஷாப், டீ, காப்பி, ஐஸ், லெமினட், கிரஷ், ஆரஞ்சு, சோடா, மேச், சிக்கரெட், ஆபீஸ், பியோன், மாஸ்டர், கிளார்க், ராஸ்கல், சேப், மெஷின், டெயிலர், கிளப், ரேஸ், கவர், கார்ட், போர்ட், ஸ்டாம்பு, இங்கி, சினிமா, டிராமா, சர்க்கஸ், சேர், பெஞ்சு, கோர்ட், போலீஸ், ஜட்ஜ், இன்ஸ்பெக்டர், சர்க்கிள், கோட், ஷர்ட், பாடி, ஜாக்கட் ஆகிய இவையும், இவைபோன்ற இன்னும் எத்தனையோ ஆங்கிலச் சொற்கள், ஆங்கிலம் படித்தவர்களால்மட்டும் கையாளப்படுகின்றன என்று எண்ணிவிட வேண்டாம். ஆங்கிலம் என்றால் என்ன? அதற்கு எத்தனை எழுத்துக்கள்? அது யாரால் பேசப்படுவது? எங்குபேசப்படுவது என்பனபோன்ற உண்மைகளைக்கூட அறியாத—எழுத்தறிவற்ற மக்களால் குற்றால நீர்வீழ்ச்சி போலத் தங்குதடையின்றிக் கையாளப்படும் சொற்கள். இவர்களுக்கு இந்தச் சொற்களை எந்தக் கணக்காய (உபாத்தியாய)ரும் கற்றுக் கொடுக்கவில்லை. இவர்கள் இந்தச் சொற்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று விருப்பியதுமில்லை. இவர்களுக்கே கூடத் தெரியாது, இந்தச் சொற்களை நாம் எப்படித் தெரிந்துகொண்டோம்—எதற்காகத் தெரிந்துகொண்டோம் — எப்பொழுது தெரிந்துகொண்டோம்—இவை எங்களுடைய மொழியா அல்லது பிறர் மொழியா என்பன போன்ற உண்மைகள். இவர்களாவது, அறியாமையின் காரணமாக—அயலானுக்கு அடிமை பட்டதன் காரணமாக—இந்தச் சொற்களைக் கையாளும் இரங்கத்தக்க நிலைக்கு ஆளானார்கள் என்று கூறலாம். ஆனால், தங்கள் சொந்தமொழியோடு ஆங்கிலமும் கற்றுத் தெளிந்தவர்கள் — அறியாமையை அகல விரட்டியவர்கள் — தாங்கள் பிறருக்கும் பிறர் மொழிக்கும் அடிமையாகவே இருக்கிறோம் என்பதை உணர்ந்தவர்கள் — அப்படிப்பட்டவர்கள் பேசுவதைப் பார்த்தால மிக மிக வேடிக்கையாகவே இருக்கும்.

“என்ன சார், இன்னிக்கு என்னமோ ரொம்ப டல்லாய் இருக்கு; உவைவ்விடம் ஒரு கப் காப்பி காட்டாய்ப் போடச் சொல்லிச் சாப்பிட்டுப் பார்த்தேன்; அதில்கூட ஒண்ணு பெட்டர் ஆகவில்லை. பெட்டிலே போய்ப் படுத்துப் பார்த்தேன்; ஏதேதோ தாட்ஸ் வந்து பிரெயினைக் குழப்பிக்கொண்டே இருக்கிறது; கொஞ்சம் வெண்டிலேஷனாவது வரட்டும் என்னு நெனைச்சு வெளியேவந்து வராண்டாவிலே உக்காந்தேன; அன் எக்ஸ்பெக்டட்லி யூ கேம்; வர்ரீங்களா சார், ஏதாவது சினிமா—டிராமாவுக்காவது போய் அப்படி ஜாலியாய் வரலாம்; கொஞ்சம் ரிக்ரியேஷனாவது உண்டாகும்; அல்லது கார்ட் பிளே பண்ணலாமா? உங்களுக்கு என்ன பிளே சார் தெரியும்? எனக்கு திரீ கண்ட்ரட்டன் போர் தெரியும். டிக்கிளேர் ஆடுவதில் நான்தான் எக்ஸ்பர்ட் என்று என்னுடைய பிரெண்டஸ் சொல்வாங்க. ஆனா, எனக்கு பிரிட்ஜ் பிளே பண்ணுவதிலேதான் ரொம்ப டேஸ்ட். பை-தி-பை, ஐ எண்டயர்லி பார்காட்டு டெல் யூ உவண் இம்பார்ட்டண்ட் மேட்டர்; நேற்று, கெட் ஆவ் தி டிப்பார்ட்மெண்டில் இருந்து எனக்கு ஒரு லெட்டர் வந்திருக்கிறது. அதில், என்னை இங்கிருந்து ட்ரான்ஸ்பர் செய்யப்போவதாக எழுதப்பட்டிருக்கிறது; என்னுடைய பொஸிஷன்தான் உங்களுக்குத் தெரியுமே! வீட்டிலே உவைவ் பிரக்னண்ட; பாதர் பெட்லேயே கிடக்கிறார். எல்டஸ்ட சன்னை டூவீகஸ்க்கு முந்தித்தான் யாராரையே பிடித்துக் கெஞ்சிக் கூத்தாடிக் காலேஜில அட்மிட் செய்தேன; செகண்ட் டாட்டருக்கு நெக்ஸ்ட் மந்தில் மேரீஜக்கு ஏற்பாடு செய்துவிட்டேன்; பாமிலி ட்ரபிள்கள் ஒண்ணுக்கு மேல் ஒண்ணு வந்துகொண்டே இருக்கிறது; அட் திஸ் ஸ்டேஜ், ஐ ரிசீவ்ட் ஏ லெட்டர், தட் ஐ வில் ட்ரான்ஸ்வெட்; வாட்-

(5-ம் பக்கம் பார்க்க)

# அந்தத்துணிவு பிறக்குமா?

—●—

வரதாச்சாரி கம்பேனி!

மவுண்ட் ரோடு பெருச்சாளிகள்!

லஞ்சக்காசு வாங்குவோர்!

அன்னக் காவடிகள்!

பிற்போக்குக் கும்பல்!

இந்தப் பூணாரம் பூண்ட பிரமுகர்கள், யார்? இவ்வளவு கடுமையான கண்டனங்களுக்கு ஆளானவர்கள் யார்? யாரால் தரப்படும் கண்டனச் சொற்கள் இவை — என்னதான் கட்சி மாச்சரியம் இருந்தாலும், இவ்விதமாகவெல்லாமா, தூற்றுவது—பெருச்சாளி என்றும் லஞ்சக்காசு பெறுவோர் என்றும், பிற்போக்குவாதிகள் என்றும், கண்டிப்பதா!—என்று கொஞ்சம் கோபமாகவே கூடக் கேட்கத்தோன்றும் பலருக்கு.

அந்தப் பலரிலே, அவசரசுபாவக்காரர்கள், தெரியும்—தெரியும் எங்களுக்கு—இந்தத் திராவிடர் கழகத்தார் தான் இவ்விதம் துடுக்குத்தனமாகத் தூற்றுவார்கள் — அவர்கள் சுபாவமே அது — என்று கூறியும் விடுவர்.

ஆனால், நாம் மேலே குறிப்பிட்டுள்ள 'அர்ச்சனை'—நமது கழகத்தவர் எவரும் செய்ததல்ல—சாட்சாத் காங்கிரஸ்காரர், சாட்சாத் காங்கிரஸ்காரர் சிலரைப்பற்றிக் கூறும், கண்டனங்கள்.

சென்னை சட்டசபையிலே அங்கத்தினர்களாக உள்ள சில காங்கிரஸ்காரர்களை, சென்னைக் காங்கிரஸ் ஏடு ஒன்று, இதுபோல வர்ணித்திருக்கிறது—காரணம் காட்டி!!

'தினசரி'யின் ஆஸ்தான தூதனாக உள்ள 'காண்டீபம்' எனும் கிழமை இதழில் உள்ள வார்த்தைகள் இவை-

யார்மீது இவ்வளவு கோபம்? காங்கிரசின் பேரால் தேர்தலில் வெற்றி பெற்று, சென்னை சட்டசபையில், மெம்பர்களாக வீற்றிருக்கும், N S. வரதாச்சாரி, மதுரை வைத்யநாத ஐயர், மற்றும் அவருடைய சகாக்கள் சிலர் மீது, வீசப்படும் கண்டனச் சொற்கள் இவை.

இந்த அளவிலும் முறையிலும், இதற்குக் காட்டப்படும் காரணத்தைவிட அதிகமான காரணத்துக்காக, அந்தப் பிரமுகர்களை, நாம் கண்டிக்க முடியாது — கண்டித்தால், காண்டீபமே கூட, கூவத்தில் குளித்துவிட்டு கையில் குட்டை கூளம் எடுத்துக் கொண்டு, ஓடோடி வரும், "ஆஹா! காங்கிரஸ் பிரமுகர்களையா, நீ நாக்கில் நரம்பின்றிக் கண்டிக்கின்றாய்! விட்டேனா பார் உன்னை!" என்று கூவும், கொக்கரிக்கும்.

இப்போதோ, காங்கிரசைச் சார்ந்த சில கண்யவான்களை, காங்கிரசை ஆதரிக்கும் ஏடெழுதும்வேறு சில கண்ணியவான்கள் கண்டிக்கும், "நர்ணா நிர்த்த" கானம் அடிக்கடி கேட்டவண்ணம் இருக்கிறது.

ஜெமீன், இனும் ஒழிப்புக்கான திட்டமொன்று, சென்னை அமைச்சர், கனம். காளா வெங்கட ராவ் அவர்களால் கொண்டுவரப்பட்டு, பல திங்களாக, படாதபாடு பட்டுக் கொண்டு வருகிறது.

கருவிலேயே இதைச் சிதைக்க விரும்பி, பெரிய பெரிய சட்ட புத்தகங்களை வீசிப் பார்த்தனர்.

'இந்து,' ஆங்கில அகராதியில் காணக் கிடக்கும் 'சப்தபலம்' பொருந்திய வார்த்தைகளை எல்லாம் தொடுத்து, பல தலையங்கங்கள் தீட்டிப் பார்த்துவிட்டது, இந்தத் திட்டத்தைத் தொலைக்க.

வசந்த மண்டபத்திலும், வயல் வெளியிலும், மாநாடுகள் கூட்டி, மக்களின் நலனுக்கு இந்தத் திட்டம் கேடு செய்யும் என்று மார்தட்டிப் பார்த்தாகிவிட்டது.

மடி சஞ்சிகளின் மாநாடு நடத்தி, சர்வ நாசம் சம்பவிக்குமடா, சண்டாளர்களே! — என்று மிரட்டிப் பார்த்தாகி விட்டது.

இந்தக் காட்டுக் கூச்சலைக்கேட்டுக் கலங்க வேண்டாம் என்று, பல கட்சிகளிலும் உள்ள முற்போக்குக் கொள்கையினர், கூறி, காளாவின் கரத்தையும் கருத்தையும் பலப்படுத்தினர்.

சட்டசபையிலே, ஜல்லடம் கட்டிக் கொண்டு, போரிடத் தொடங்கினர், வரதாச்சாரியார், வைத்யநாத ஐயர், ஆகியோர்-இனாம்களைத் தொடாதே! அவை மதத்தின்பேரால் தரப்பட்ட தானங்கள் — அவைகளைக் கெடுப்பது, மகாபாபம், மகா தோஷம் என்று கூறினர்.

சட்டசபையிலே, மிகப் பெரும்பாலோரின் ஆதரவு, ஜெமீன் இனும் ஒழிப்புத் திட்டத்துக்குக் கிடைத்தது.

உடனே, வரதாச்சாரியாரும் அவரைச் சார்ந்தவர்களும், காங்கிரஸ் கட்சிக் கூட்டத்திலே, கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு, திட்டத்தைத் தகர்க்க முனைந்தனர். அங்கும் அவர்களின் முயற்சி பலிக்கவில்லை.

விட்டனரா? விடுவரா? அதுதான் இல்லை—பழைய நாட்களிலே, வரம் பெற, காடேகிக் கடுந்தவம் புரிந்தவர்களின் வழி வழியினரல்லவா, பாவம், டில்லி நோக்கித் தவமிருந்தனர்—காவடி தூக்கினர்.

தவமும் பலித்ததம்மா—என்று பாடிக்களிக்கும் அளவுக்கு அவர்களுக்கு வெற்றி கிடைத்தது. காங்கிரஸ் மேலிடம் வரதாச்சாரியார் போன்றாரின் பக்கம் ஆதரவு காட்டலாயிற்று. இனாம்களுக்கு, காளாவின் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கவேண்டும், என்று, துவக்கப்பட்ட விஷப்பிரசாரத்துக்குக் காங்கிரஸ் மேலிடம் செவி சாய்த்ததுடன், தனது பரிவுகாட்டி, சென்னை மந்திரி சபைக்கு இது சம்பந்தமாகச் சில புதிய யோசனைகளை அனுப்பி வைத்தது. களித்தனர் கலகக்காரர்கள்—காளா கலங்கினார். காளாவோ அமைச்சர்—அவருடைய திட்டத்தையோ, சட்டசபையினரில் பெரும்பான்மையினர் ஏற்கின்றனர், சென்னை மாகாணக் காங்கிரஸ் கமிட்டியோ, அதற்கு ஆதரவளிக்கிறது, நாடோ, காளாவின்திட்டம், எதிர்பார்த்த அளவு தீவிரமானதல்ல என்றபோதிலும் ஏதோ இந்த அளவேனும் இருக்கிறதே என்று எண்ணி ஓரளவுக்கு மகிழ்ந்து, ஆதரவு தந்தது—இவ்வளவு இருந்தும், காளாவின் திட்டத்தைத்தகர்க்கமுடிகிறது சட்டசபையிலும், காங்கிரஸ் கட்சியிலும், நாட்டிலும், செல்வாக்கற்ற ஒரு சிறுகூட்டத்தால்.

பித்தாபுரம், பொப்பிலி, விஜயநகரம், எட்டையாபுரம், முதலிய இடங்களிலே, மாளிகைகளில் வீற்றி

ருக்கும். ஜெமீன்தாரர்களால் முடிய வில்லை, காளாவின் திட்டத்தைக் குலைக்க. இனாம்தாரர்களின் சார்பாக, இந்தச் சிறுகும்பல் கிளம்பி ஆதரவு காட்டிற்று, வெற்றி கிட்டிற்று.

சிங்கம் பங்கமடைகிறது, சிறுநரி வெற்றி பெறுகிறது.

இந்தக் கேவலத்துக்கு, தன்மானத்தில் அக்கரையுள்ள ஓர் அமைச்சர் எப்படிச் சம்மதிக்க முடியும்—எங்ஙனம் சகிப்பது?

சட்டசபையிலேயோ, கட்சிக்குள்ளேயோ, நாட்டிலேயோ, பலமான எதிர்ப்பு இருந்தால், அது அமைச்சரின் ஆற்றலையும் ஆண்மையையும் பரீட்சிக்கும் வீரவிளையாட்டு என்று எண்ணலாம்—இது வீரவிளையாட்டல்ல—கோட்டைக்குள்ளே நடைபெறும் சதி—கூடிக்குலவும் தோழர்களுக்குள்ளாகவே நடைபெறும் காட்டிக்கொடுக்கும்கேவலம். இதனை எங்ஙனம் சகித்துக்கொள்வது!

அமைச்சராகவும், பெருவாரியானவர்களின் ஆதரவைப் பெற்றவராகவும், நானிருந்து என்னபயன், இதோ, என் வீரம் பழிக்கப்படுகிறதே, என் எண்ணத்திலே மண் போடப்படுகிறதே, என்முகத்தில் கரி பூசுகிறார்களே, என்று அமைச்சர் உள்ளம் நோக, இவர் அமைச்சராக இருந்தால் என்ன, ஆளவந்தார் கூட்டத்தவராக இருந்தால் என்ன, கட்சியிலே இவர் கரம் வலுவாக இருந்தால்என்ன, நாடு பேராதரவு காட்டினால்மட்டுமென்ன, நம்மிடம் என்ன செய்யமுடியும், நமது ஆற்றலுக்கு முன்பு இந்த அமைச்சர் என்ன செய்யமுடியும், இதோ இவருடைய திட்டத்தை நாம் குலைக்கிறோம், நமது ஆதிபத்யத்தை அமைச்சர் அறியட்டும், என்று கலகக்காரர்கள் களிக்கவுமான நிலைமை ஏற்பட்டது.

நாட்டுமக்களோ, நாமோ ஆதரவு அளித்து விட்டோம் அமைச்சரின் திட்டத்துக்கு, அமைச்சருக்கோ, கட்சிக்கூட்டத்திலும் சட்டசபையிலும் பேராதரவு இருக்கிறது, பித்தர் சிலர் எதிர்ப்பினும், திட்டத்தை என்ன செய்து விடமுடியும், வெற்றிகரமாக நிறைவேறும் என்று, எண்ணி இருந்தனர். மேலிடத்துத் தாக்கீது வந்தது—இனாம் தாரர்களை இரட்சிக்கும் விதமாக—அவர்களுக்குத்தானும் நஷ்டஈடுத் தொகையை அதிகப்படுத்தும் விதமாக.

அமைச்சரை, அந்தச் சிறுகூட்டம், அன்று எவ்வளவு ஆணவமும் அலட்சியமும் கக்கும் கண்களுடன் பார்த்திருக்கும்! அமைச்சர், எவ்வளவு சோகமும் வெட்கமும் அடைந்திருப்பார்!

மீண்டும் கட்சிக்கூட்டத்திலே, மந்திரியார் முறையிட்டார். காங்கிரஸ் மேலிடம் கூறுகிற முறையிலும் அளவிலும் 'நஷ்டஈடு' தருவதாக இருந்தால், தாங்கமுடியாத பெரும்சுமையை இந்த மாகாணத்தின்மீது ஏற்றவேண்டிவரும்—இது ஆகாது—என்று எடுத்துரைத்தார்.

காங்கிரஸ்மேலிடம், குறிப்பிட்டுள்ள யோசனையின்படி, நஷ்டஈடு தருவதென்றால், ஏறக்குறைய 30 கோடிரூபாய் பாரத்தை இம்மாகாணம் சுமக்கவேண்டி நேரிடுவதுடன், ஜெமீன் இனாம் ஒழிப்புத்திட்டத்தினால், இலாபம் உண்டாவதற்குப் பதிலாக, பெரும் நஷ்டமும் வீண் தொல்லையுந்தான் விளையும், என்பதை நிபுணர்கள் கூறுகின்றனர்—அமைச்சரும் அறிவிக்கிறார்.

மேலிடத்துக்கு, காங்கிரஸ் கட்சிக் கூட்டம், முறையிட்டுக் கொண்டது, இந்தப் பெரும் சுமையை எமதுமாகாணத்தின்மீதுஏற்றாதீர்—என்று.

இதுபோதுதான் காண்டபம் சொல்லம்புகளைத் தொடுத்தது, வரதாச்சாரி கம்பெனிமீது!

ஏன், இந்தச் சிறுகூட்டம், அமைச்சரின் முகத்திலே கரிபூசும் காரியம் செய்கிறது, மேலிடத்தின் தயவைப்பெற்று, என்பதற்குக்காண்டபம் காட்டும் காரணம், கண்யத்திலே நம்பிக்கையும் மதிப்பும் கொண்டுள்ள எவரையும் தலைகுனியச் செய்யும் விதத்தது. கேளுங்கள், அந்தக் காரணத்தை!

'வெள்ளிக்காசுகள் தண்ணீர் பட்டபாடாய் நடமாடுவது தான் காரணம்.''

இனாம் ஒழிப்புத் திட்டத்தால் பாதிக்கப் படுபவர்களிடமிருந்து வெள்ளிக்காசுகளைப் பெற்றுக் கொண்டு—அதாவது கைக்கூலி பெற்றுக்கொண்டு—காங்கிரஸ்மேலிடத்துக்குத் தூதுசென்றும் தூபமிட்டும், இந்தக்கூட்டம், காளாவின் திட்டத்தைக் கெடுக்கிறது—என்று —நாமல்ல—காங்கிரசை ஆதரிக்கும் ஏடு, பச்சையாகவே எழுதுகிறது.

இனாம் ஒழிப்புத்திட்டத்தை உருக்குலைக்கும் முயற்சியில் துவக்கமுதல் ஈடுபட்ட, காங்கிரஸ் M. L. A. க்கள், யாரார் என்பதை நாடறியும்—அவர்களின் போக்குதையைக் காண்டபம் நாட்டுக்கு அறிவிக்கிறது—ஏதோ கொள்கைகாரணமாக, கருத்துக் கோளாறு காரணமாக அவர்கள் இதுபோல் நடந்துகொள்கிறார்கள் என்று எண்ணிவிட வேண்டாம், எல்லாம் 'பணநாதன்' செய்கிற காரியந்தான் என்று கூறுகிறது.

இந்த பகிரங்கக் குற்றச்சாட்டைக் கேட்டுக்கொண்டு, துளியும் துடிக்காமல் பதைக்காமல் இருக்க முடிகிறது, அந்தக் கண்ணியமிக்கவர்களால்!

வெள்ளிக்காசு தண்ணீர் பட்டபாடாய்ப் படுகிறது! — எங்கு?—புண்யபூமியில்!—எப்போது?—புனிதர் ஆட்சியில்!!

வெள்ளிக் காசுக்காக, சொந்தக் கட்சியின் திட்டத்தைக் குலைக்கவும், ஏழை எளியோருக்குத் துரோகம் இழைக்கவும், சிலர், துணிகிறார்கள், அவர்களே நாட்டு மக்களுக்குப் பிரதிநிதிகள் — M. L. A. க்கள். எப்படி இருக்கிறது இலட்சணம்!

பொதுமக்களுக்கு நன்றாக ஒரு உண்மை தெரியும்; இனாம்தாரர்களில் பெரும்பாலானவர்கள் பார்ப்பனர் என்பதை அறிவர். வெள்ளிக் காசுகளைப் பெற்றுக்கொண்டு மேலிடத்தாரிடம் சென்று சாட்சி கூறி, இனாம் தாரர்களுக்குச் சலுகையும் சாதகமும் தேடியவர்கள், பார்ப்பனப் பிரமுகர்கள், வைத்யநாத ஐயர், வரதாச்சாரியார் போன்றவர்களே, என்பதையும் மக்கள் அறிவர். இந்தக் கூட்டுச் சதி நாட்டில் அமைச்சரைக் கலக்கமுறச் செய்யுமளவுக்கு வெற்றி பெற்றிருப்பதை அறிவர். அறிந்தவர்கள், நாட்டு நிலையைப் பற்றி என்ன கூறுவர்? எவ்வளவு மனம் குமுறுவர்.

குறை கூறுகிறார்கள்—அனாவசியமாகப் பார்ப்பனரைக் கண்டிக்கிறார்கள் இந்த அழிவு வேலைக்காரர்கள் என்று நமது கழகத்தவரைக் கண்டித்துவிட்டு மேதைப் பட்டமும் சமரச வாதி என்ற சிறப்புமா

(13-ம் பக்கம் பார்க்க)

## ஆங்கிலம் இருந்த இடத்தில்

2-ம் பக்கத் தொடர்ச்சி

கேன் ஐ டு? நீங்களே சொல்லுங்க சார்."

என்று இவ்விதமாக இருக்கும். இவர்களிற் பெரும்பாலோர், தாங்கள் ஆங்கிலம் படித்திருக்கும் காரணத்தாலேயே வேண்டுமென்றே இவ்விதம் பேசுவதில்லை. அவர்களையும் அறியாமலேயே சிற்சில ஆங்கிலச் சொற்களும், சொற்றொடர்களும் அவர்களுடைய தாய்மொழியோடு, அழைப்பின்றி நுழைந்து, சேர்ந்து விடுகின்றன. இன்னும் சிலர் இருக்கிறார்கள், தாங்கள் பேசும் மொழியோடு ஆங்கிலத்தையும் சேர்த்துப் பேசினால்தான் பெருமை—மதிப்பு என்று எண்ணுபவர்கள். என்னுடைய நண்பர் ஒருவர் — நிறைந்த செல்வம் உள்ளவர்—ஆங்கிலம் தெரியாது. என்றபோதிலும், எப்பொழுதும் அவர் கையில் ஏதாவதொரு ஆங்கிலச் செய்தித்தாள் இருக்கும் —அதைப் படிப்பதாகவும் பாவனை செய்துகொள்வார். அவர் ஒரு மர வணிகர். ஒரு சமயம் அவருக்கு ஒரு தந்தி வந்தது. அப்பொழுது நானும் கூட இருந்தேன். அந்தத் தந்தியில்,

"பர்மாவில் இருக்கும் அவருடைய மகன் இறந்து விட்டார்"

என்று இருந்தது. ஆனால், தந்தியைப் பிரித்துப் பார்த்ததும் என்னுடைய நண்பர் என்ன சொன்னார் தெரியுமா?

பர்மாவில் இருந்து ஒரு கப்பலில் தேக்க மரம் வருவதாக

தந்தி வந்திருக்கிறதென்று கூட இருந்தவர்களிடம் கூறியதோடு மட்டும் நின்றுவிடாமல், தம்முடைய ஆட்கள் சிலரைக் கூப்பிட்டு, தேக்க மரங்களை இறக்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யும்படியும் சொன்னார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த எனக்குத் தூக்கிவாரிப் போட்டது போல் ஆய்விட்டது. இவருக்குத்தான் ஆங்கிலம் தெரியாதே! இவர் எப்படித் தந்தியைப் படித்தார் என்ற எண்ணம் எனக்கு. எண்ணியதோடு மட்டும் நான் நிற்கவில்லை. "ஆங்கிலம் படியாமலேயே தந்தியைப் படித்துத் தெரிந்துகொள்ளக்கூடிய அளவு ஆங்கிலத்தில பயிற்சி பெற்றுவிட்டீர்களோ!" என்று நட்பு முறையில் நயமாகவே கேட்டேன். அதற்கு அவர், "ஏதோ தாங்கள் போன்ற ஆங்கிலம் தெரிந்தவர்களின் நட்பினாலும் ஆசீர்வாதத்தினாலும் கொஞ்சம் தெரிந்துகொண்டேன்" என்றார். நானும் அவர் கூறியதை உண்மையென்றே நம்பினேன். இரண்டு நாட்கள் கழித்து அவர் வீட்டில் பலர் கூடி அழுவது கேட்டது. ஏன் அழுகிறார்கள் என்பது பின்னர் தெரியவந்தது. என்னுடைய நண்பரின் இளையமகன் (பள்ளி மாணவன்) தந்தையின் சட்டைப் பையில் ஏதாவது சில்லரை இருக்குமா என்று தேடியபோது, பர்மாவில் இருந்து வந்த தந்தியைப் பார்த்துவிட்டான். அதில், அவனுடைய அண்ணன் பர்மாவில் இறந்துவிட்டதாகக் காணப்பட்டது. உடனே அவன் அன்னையிடம் ஓடி, அண்ணன் இறந்துவிட்ட செய்தியைக் கூறி ஐயோ என அழுதான்—அன்னையும் அலறி அழுதாள்—அங்கிருந்த அனைவரும் அழுதனர். அப்பொழுது வெளியேசென்றிருந்த என் நண்பர் அங்கு வந்தார். அவருடைய இளைய மகன் ஓடோடிச் சென்று தந்தையிடம் தந்தியைக் காண்பித்து, "அப்பா! என் அருமை அண்ணன் இறந்துவிட்டார் என்று தந்தி வந்திருக்கிறதே! அதை எங்களிடம் சொல்லவில்லையே!" என்று சோர்ந்து விழுந்து புரண்டழுதான். இதைக்கேட்ட தந்தை திடுக்கிட்டு, மறுவிநாடி சமாளித்துக்கொண்டு, "அடே, கண்ணே நீயுமா அந்தத் தந்தியைப் பார்த்துவிட்டாய்? நான் அதைப் பார்த்தவுடனே என் நெஞ்சு வெடித்துவிடும்போல் இருந்ததடா! இந்தக்கொடுமையை வீட்டில் எப்படிக்கூறுவது? அன்னையின் அடிவயிறுபற்றி எரியுமே! உன்னுடைய இளம் உள்ளமும் பாகாய் உருகிவிடுமே! என்றெண்ணி, என்ன செய்வதென்று தெரியாது, அங்குமிங்கும் அலைந்து, திரிந்து கொண்டிருந்தேனடா கண்ணே" என்று கூறிக்கொண்டு, அவரும் அங்கிருந்தவர்களுடன் சேர்ந்து அழத் தொடங்கினார். இந்நிகழ்ச்சி கட்டுக்கதையல்ல. இருபதாண்டுகளுக்கு முன் மாதப்பை என்ற இடத்தில் என்னுடைய நண்பர் ஒருவர் வீட்டில் நடந்த உண்மை நிகழ்ச்சியாகும்.

இந்நிகழ்ச்சி கற்பிக்கும் பாடம் என்ன? பிறமொழிக்கு ஒருவன் அடிமையானதால், அவனுடைய வாழ்வில் ஏற்பட்ட பேரிடி போன்ற துன்பத்தையும் சாதாரணமாகக் கருதும் அளவுக்கு அறியாமையும், தெரியாத ஒன்றைத்தெரிந்ததுபோல் பாசாங்கு செய்யும் ஆணவத்தையும் அன்றோ இந்நிகழ்ச்சி படம்போட்டுக் காட்டுகின்றது. இது எதனால் ஏற்பட்டது? ஒருமொழிக்கு, அளவுக்கு மீறிய செல்வாக்கும் மதிப்பும் உண்டாகி, அதனைக் கையாள்வது ஒரு தனிப்பட்ட—சிறந்த பெருமை என்ற தவறான—தகுதியற்ற எண்ணம் நமக்கு ஏற்படுத்தப்பட்டதாலன்றோ இந்தநிலை ஏற்பட்டது.

இனி, ஆங்கிலேயருக்கும், அவர்தம் மொழிக்கும் நாம் அடிமைப்பட்டதோடு மட்டும் இந்தக் கொடுமை நிற்கவில்லை. அவர்களுடைய கலாச்சார—பழக்க வழக்கங்களும் நம்மை ஓரளவுக்கு அடிமை கொண்டுவிட்டன என்பதும் வெட்கத்துடனும் துக்கத்துடனும் குறிப்பிடவேண்டிய ஒன்றாகும். இன்று நம்மவரிற் சிலர், தங்கள் கலாச்சார—பழக்க வழக்கங்கள் அனைத்தையுமே கைவிட்டு ஆங்கில முறையையே பின்பற்றி நடப்பது கண்கூடு. நடை உடையில் காற்சட்டையும், தொப்பியும், டையும்; சாப்பாட்டில் கத்தியும், முள்ளும், கரண்டியும், கோப்பையும், மேசையும், நாற்காலியும் இன்னும் இவைபோன்ற பல, தமிழரின் கலாச்சார—பழக்க வழக்கங்களுக்கு முற்றிலும் புறம்பான முறைகளையே நம்மவரிற்சிலர் விடாப்பிடியாகக் கொண்டுள்ளனர்.

இனி, ஆங்கிலமொழிக்கு, நாம் அடிமையானதற்குக் காரணம், அதனுடைய சிறப்பை எண்ணியல்ல, அதன் செல்வாக்கை எண்ணியே நாம் அதற்கு அடிமையானோம். அதன் சிறப்பையும், அம்மொழியின் வாயிலாகப் பிறந்த அறிவு நுட்பங்களையும் நாம் எண்ணி அதற்கு உண்மையாகவே அடிமைப்பட்டிருந்தோமானால், இன்று நம்முடைய வீடுகளில் அகல் விளக்கும், கலப்பையும், கட்டை வண்டியும் இராது. ஆங்கிலம் நம்மை ஆளும் மொழி, நம் அடிமைப் பிழைப்புக்கு ஆதாவாய் நிற்கும் மொழி என்ற அளவோடு நாம் நின்றுவிட்டதாலேயே—நிற்கும்படி செய்துவிடப்பட்டதாலேயே நாம் ஆங்கிலமொழியால் பெறக்கூடிய — பெறவேண்டிய நன்மைகளைப் பெறாமல் வறிதே அதற்கு அடிமையானோம்.

நாம் ஆங்கிலத்தைப் பொதுமொழியாகக் கொண்டதைப் போலவே

வேறுபல நாடுகளிலும் அதுபொது மொழியாகவைத்து வழங்கப்படுகின்றது. ஆனால், நமக்கும் அவர்களுக்குமுள்ள வேறுபாடு மிகப் பெரிது. எடுத்துக்காட்டாக, அமெரிக்காவில் ஆங்கிலம் கையாளப்படுவதற்கும், நாம் அதனைக் கையாள்வதற்கும் உள்ள வேறுபாடு மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாட்டைவிட மிகப் பெரியதாகும். அமெரிக்கர்கள், தாங்களும் ஆங்கிலேயரின் இனம்தான் என்பதற்காக மட்டும் ஆங்கிலத்தைக் கையாள்வதில்லை. ஆங்கிலமொழி, அமெரிக்க மக்களின் அடிப்படைக் கலாச்சாரத்தை விளக்குவதில் இருந்து, அணுகுண்டு செய்வது வரை உதவி செய்கின்றதென்ற காரணத்தாலேயே, அங்கு, அது, அவர்களின் சொந்த மொழியாகக் கருதப்படுகின்றது. ஆனால், இங்கு, நாம் அதனை அரை வயிறு கஞ்சியாவது வார்க்காதா என்ற கேவலமான காரணத்துடனேதான் அம்மொழியைக் கற்றுக் கொண்டோம் — அதற்கு அடிமையானோம். எனவேதான், நாம், ஆங்கிலேயர்களால் ஆளப்பட்டோம்—அவர்களுடைய மொழியால் ஆளப்பட்டோம்—அவர்களுடைய கலாச்சார—பழக்க வழக்கங்களால் ஆளப்பட்டோம் என்று கூறுகின்றேன்.

ஆங்கிலேயரின் ஆட்சிமுறை நம் நாட்டைவிட்டு விரட்டப்பட்ட இன்றைய நிலையில், அவர்களின் ஆட்சிமுறையைப் பற்றியும், மொழியைப் பற்றியும், கலாச்சார பழக்க வழக்கங்களைப்பற்றியும் ஏன் இப்பொழுது குறிப்பிடுகிறேன் என்றால், இந்தநிலைமையை அண்மையில் சென்னைக்கு வந்துபோன பண்டித நேரு அவர்களே உண்டாக்கிவிட்டார். எப்படியென்றால், அவர் இந்திமொழியைப் பற்றிப் பேசியபொழுது,

"ஆங்கிலம் இவ்வளவு காலமும் நமது பொதுமொழியாக இருந்தது இப்போது ஆங்கிலம் இருந்த இடத்தில் இந்தி பொது மொழியாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறோம்"

என்று கூறியுள்ளார். எனவே, ஆங்கிலம் இருந்தஇடத்தில் இந்தி இருக்க வேண்டும் என்று கூறும் பண்டிதர் அவர்கள் எந்தப் பீடத்தில் இருந்துகொண்டு இதனைக் கூறுகிறார்? ஆங்கிலேயர்கள், தங்கள் மொழியை நாம் கற்றுக்கொள்ள வேண்டுமென்று எந்தப் பீடத்தில் இருந்துகொண்டு கூறினர்? ஆங்கிலேயர்கள், தாங்களாகவே ஏற்படுத்திக் கொண்ட எதேச்சாதிகார பீடத்தில் இருந்துகொண்டு, ஆங்கிலம் கற்றால் உங்களுக்கு வேலை தரப்படும்—இல்லையேல் வேலை கிடையாதென்று கூறினர். ஆனால், பண்டிதர் வீற்றிருக்கும் பீடம், அவர், தானாக ஏற்படுத்திக் கொண்டதல்லவே! மக்களன்றோ அவருக்கு அந்தப் பீடத்தை ஏற்படுத்தித் தந்தனர். மக்களின் பீடத்தில் அமர்ந்திருக்கும் ஒருவர், மக்களின் விருப்பப்படியும், அவர்களின் தேவைக்கேற்பவும் காரியங்களை நடத்தாமல், பழைய எதேச்சாதிகார முறையில், "நாங்கள் சொல்கிறோம்—நீங்கள் கேளுங்கள்—நாங்கள் சொல்கிறபடிதான் நீங்கள் நடக்கவேண்டும்" என்று கூறுவது? இதற்காகவா இவர்கள் எதேச்சாதிகார ஆட்சியை முறியடித்து மக்கள் ஆட்சியை ஏற்படுத்திக்கொண்டது? ஆங்கிலேயன் ஆங்கிலத்தைக் கற்கச் சொன்னான்; நாங்கள் ஆங்கிலத்துக்குப் பதில் இந்தியைக் கற்கச் சொல்கிறோம் என்று கூறுவதில் ஜனநாயகம் என்ற மக்களாட்சி முறை எங்கே—எந்த வடிவத்தில்—எந்தத் தன்மையில் காட்சியளிக்கிறதென்று கேட்கிறேன்.

இனி, ஆங்கிலத்துக்குப் பதில் இந்தியைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறிய பண்டிதரே மேலும் கூறியுள்ளார், "ஆங்கிலம் இங்கு இருக்கும்—இங்கு இருக்கவேண்டும்—இங்கிருந்து போகாது" என்று. இதுமட்டுமல்ல அவர் கூறியது. "ஆங்கிலத்தோடு, பிரஞ்சு, ஜெர்மன், ஜப்பான், சீனம் முதலான மொழிகளையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்" என்றும் கூறியிருக்கிறார். பண்டிதர் அவர்கள் கூறும் வெளிநாட்டு மொழிகளின் பயிற்சி, நாம் அந்நாட்டவரோடு வியாபாரத் துறையில் தொடர்பு வைத்துக் கொள்வதற்கு ஒரு வேளை தேவைப்படலாம். அதுவும், அந்தத் துறையில் ஈடுபடுபவர்களுக்கு மட்டும்அம்மொழி தேவைப்படலாம், மற்றவர்களுக்கு, அவை, அறிவுத்துறைக்கன்றி வேறுவகையில் தேவைப்படா. ஆனால், இந்தியை நாம் அனைவரும் கட்டாயம் கற்றுக்கொள்ள வேண்டுமென்று பண்டிதர் அவர்கள் கூறுவது எதற்காக என்பதுதான் விளங்கவில்லை.

என்றாலும் அவர் ஒரு காரணம் கூறுகின்றார். அதாவது, இந்நாட்டு மக்கள் அனைவரும் ஒருவரோடொருவர் தொடர்பு வைத்துக் கொள்வதற்கு ஒரு பொதுமொழி வேண்டும்—அதற்கு இந்தியே உகந்தது என்று. இந்தி ஒன்றுதான் இந்நாட்டுக்குப் பொதுமொழியாக இருக்க உகந்தது என்று கூறப்படுவதில் உண்மை எதுவும் இல்லை என்பதை மொழித்துறையில் ஆராய்ச்சி செய்த அறிஞர்கள் எல்லாருமே கூறிவிட்டனர். அதுமட்டுமல்ல, இந்தியா, இந்துஸ்தானியா இந்நாட்டுப் பொதுமொழி என்பதில் அவர்களுக்குள்ளேயே இருந்துவரும் சச்சரவு இன்னும் தீர்ந்தபாடில்லை, பண்டிதநேரு அவர்கள், இந்துஸ்தானிதான் பொதுமொழி என்று கூறுகிறார். அவருடைய நண்பர்களும் மத்திய சட்டசபை உறுப்பினர்களுமான சிலர், இந்திதான் பொது மொழியாக இருக்கமுடியுமென்றும், இந்துஸ்தானி அதற்கு அருகதையற்றதென்றும் கூறி அறிக்கை வெளியிட்டுள்ளனர். ஆனால், இத்துறையில் நாம் ஆராய்ச்சி எதுவும் செய்ய வேண்டியதில்லை. காரணம், நமக்கு இந்தியும் உடன்பாடல்ல, இந்துஸ்தானியும் உடன்பாடல்ல என்பதுதான். என்றாலும், இங்கு ஒன்றை மட்டும் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. அதாவது, இந்நாட்டுக்கு ஒரு பொது மொழி தேவை என்று கூறுபவர்களுக்கிடையே, அதற்கு உகந்தது இந்திதானா? அல்லது இந்துஸ்தானிதானா என்பது முடிவு செய்யப்படுவதற்கு முன்னரேயே, நமது மாகாணக் கல்வி அமைச்சர் இந்தியை இங்கு கட்டாய பாடமாக்கிவிட்டார். இங்கு கட்டாய பாடமாக்கப்பட்டிருக்கும் 'மொழி' பண்டிதநேரு அவர்கள் கூறும் இந்துஸ்தானிதானா? அல்லது அவருடைய நண்பர்கள் கூறும் இந்திதானா? என்பது தெரியவில்லை. இந்த இரண்டில் எதனைக் கட்டாய பாடமாக்கி இருக்கிறோம் என்பது கல்வி அமைச்சருக்கே கூடத் தெரியாது. அதுமட்டுமல்ல, இங்கு கற்றுக் கொடுக்கப்படும் 'பொது மொழி' இந்துஸ்தானியா அல்லது இந்திதானா என்பது அதனைக் கற்றுக்கொடுக்கும் ஆசிரியருக்கோ, கற்றுக்கொள்ளும் மாணவர்களுக்கோ கூடத் தெரியாதென்றே நினைக்கிறேன். அவ்வளவு குழப்பம் இந்தப் பொது மொழி

யைப் பற்றி, ஒரு பொதுமொழி தேவை என்று சொல்லிக்கொள்பவர்களுக்கிடையே இருக்கிறது. இந்தக் குழப்பம் தெளிவடையும் என்று கூடச் சொல்வதற்கில்லை. காரணம், இந்தி—இந்துஸ்தானி என்ற குழப்பம், வடநாட்டில் ஏற்பட்டுள்ள வகுப்பு வேற்றுமை காரணமாக உண்டாக்கப்பட்டதாகத் தெரிகிறது. இதனைப் பண்டித நேரு அவர்களே தம்முடைய சென்னைச் சொற்பொழிவில் சாடையாகக் குறிப்பிட்டுமுள்ளார்.

இந்தக் குழப்பமான நிலையில், நமது கல்வியமைச்சர் இங்கு இந்தியையோ இந்துஸ்தானியையோ சட்டாய பாடமாக்கியது எப்படியிருக்கிறதென்றால், ஒரு பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடியதில், இருவர், அவர்களுக்குப் பொருத்தமானவர்கள் என்று மாப்பிள்ளை தேடியவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால், மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுத்தவர்களுக்கிடையே தங்கள் பெண்ணுக்குத், தேர்ந்தெடுத்த இருவரில் யாரை மணம் முடித்து வைப்பதென்ற முடிவு ஏற்படவில்லை. பெண்ணுக்கு நெருங்கிய சொந்தக்காரராகத் தம்மை உரிமை பாராட்டிக் கொள்பவர் ஒரு மாப்பிள்ளையைக் குறிப்பிடுகிறார். ஆனால் அவருடைய உறவினர்கள் இன்னொரு மாப்பிள்ளையைக் குறிப்பிடுகின்றனர். இந்த நிலையில், மேற்சொன்ன இரு சாராருக்கும் தாம் நண்பர் என்று கூறிக்கொள்ளும் ஒருவர், அவ்விரு சாராராலும் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு மாப்பிள்ளைகளும் அழகிலும் குணத்திலும் வடிவத்திலும் வேறுபாடு காணமுடியாமல் இருந்ததால், அந்த இருவரில் ஒருவரை, 'இவன்தான் இவளுக்கேற்ற மாப்பிள்ளை'யென்று கூறி மணம்முடித்து வைத்துவிடுகிறார். இப்படி நடைபெறும் ஒரு புதுமையான நிகழ்ச்சிக்கும், இப்போது நமது கல்வியமைச்சர், செய்திருக்கும் பொது மொழிக் கட்டாயக் கல்விக்கும் யாதாயினும் வேறுபாடு காணமுடியுமா? பொதுமொழிப் பிரியர்களே! பொது அறிவைச் சிறிது பயன்படுத்திக் கூறுங்கள்.

இனிப், பண்டிதர் அவர்கள், இந்நாட்டு மக்கள் ஒருவரோடொருவர் தொடர்பு வைத்துக் கொள்வதற்காகவே ஒரு பொதுமொழி வேண்டுமென்று கூறுகின்றோம் என்பதிலும் ஒரு சிறிதும் உண்மையாயிருப்பதாகத் தெரியவில்லை. எப்படியென்றால், பொதுமொழி ஒன்று அனைவருக்கும் வேண்டப்படாமலேயே இந்நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள — பலதிறப்பட்ட மொழிகளைப் பேசும் மக்கள் பன்னெடுங் காலமாகவே ஒருவரோடொருவர் தொடர்பு வைத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். சென்னை நகரிலுள்ள சவுக்கார்ப்பேட்டையிலும் பிற இடங்களிலும் இருக்கும் வடவர்கள்-மார்வாடிகள் தமிழ்நாட்டுக்கு வருமுன், இந்நாட்டு மொழியான தமிழைக் கற்றுக்கொண்டா வந்தனர்? அல்லது இங்கிருந்து ஐதிராப்பாக்கம், பாம்பே, பூனா முதலான இடங்களுக்குப் போய் அங்கு வாணிபம் செய்யும் தமிழ் மக்களாவது அந்தந்த நாட்டுமொழிகளைக் கற்றுத்தெரிந்து கொண்ட பின்னரா அங்கு போனார்கள்? கல்கத்தாவில் இருந்து வந்த தோழர் சவுத்ரி என்ற வங்காளி ஒருவர்தான் காஞ்சிபுரத்தில் மின்சார இலாக்காத் தலைவராக (Engineer) இருக்கிறார். இவர் இங்கு பேசப்படும் தமிழ் மொழியைக் கற்றுக் கொண்டு வரவில்லை ஆனால், இங்குள்ள தமிழர்களோடு தொடர்பு வைத்துக்கொண்டுதான் இருக்கிறார். இதுபோலவே, கல்கத்தா, டில்லி முதலான இடங்களுக்குச் சென்று அரசாங்க அலுவல்களில சில தமிழ் மக்கள் (பல பார்ப்பனர்கள் உள்பட) அமர்ந்திருக்கின்றனர். இவர்களும் இங்கிருந்து போவதற்கு முன் இந்தி கற்றுக்கொண்டுபோகவில்லை. ஆனால் இவர்கள் அங்குள்ள இந்திபேசுவோரோடும், வங்காளிபேசுவோரோடும் நல்ல விதமான தொடர்பு வைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இவ்வாறு, வாணிக (வியாபாரத்) துறையிலும், அரசியல் அலுவல் (உத்தியோகத்)துறையிலும் இந்நாட்டு மக்கள் அனைவரும், ஒரு பொது மொழியின் இன்றியமையாமை இல்லாமலேயே ஒருவருக்கொருவர் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கின்றனர். எனவே இந்நாட்டு மக்கள் அனைவரும் ஒருவரோடொருவர் தொடர்பு வைத்துக் கொள்வதற்கு ஒரு பொதுமொழி வேண்டுமென்று பண்டித நேரு அவர்கள் கூறுவதில் பொருளே இல்லை.

இந்த நிலையில் இன்னொரு உண்மையையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அதாவது, இப்போது, தென்னாட்டவருக்கும் வடநாட்டவருக்கும் இருந்துவரும் தொடர்பு இனி அறுபட வேண்டுமென்ற முறையில் நாட்டுப் பிரிவினையின் இன்றியமையாமை வற்புறுத்தப்பட்டு, அத்திட்டம் நடைமுறைக்கு வரவேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டு வருகின்றன. எனவே, இந்த நிலை ஏற்படும்போது—ஏற்பட்டே தீரும், அப்போது, இப்போதிருக்கும் அளவு வடநாட்டுத்—தென்னாட்டுத் தொடர்புஇருக்கமுடியாது. பண்டிட் விஜயலட்சுமி அம்மையார் ரஷ்யாவில் இருப்பதுபோல்—தோழர் கிரி அவர்கள் இலங்கையில இருப்பது போல், இரண்டொருவர், வடநாட்டிலுள்ளவர்கள் இங்கும், தென்னாட்டிலுள்ளவர்கள் அங்கும் இருக்கும் நிலைமைதான் ஏற்படும். ஆகையால், இதற்காக இந்நாட்டவர் அனைவரும் ஒரு பொதுமொழியைக் கற்றுக் கொள்ளத்தான் வேண்டுமென்று பண்டிதர் அவர்கள் கூறுவதிலும் பொருள் இல்லை.

இனி, அறிவுத்துறைக்காக இந்தியோ அல்லது இந்துஸ்தானியோ படிக்கவேண்டுமென்று கூறவும் முடியாது. ஏனென்றால், இம்மொழிகளுக்கு இலக்கியச் சிறப்போ, இலக்கண அமைப்போ இல்லை என்று, இம்மொழிகளைக் கற்க வேண்டுமென்று வற்புறுத்திக் கூறும் பண்டிதர் அவர்களும் மற்றும் அவருடைய நண்பர்களுமே உறுதியாகக் கூறிவிட்டனர்.

எனவேதான், ஆங்கிலம் இருந்த இடத்தில் இந்திமொழியை உட்கார வைப்பது உண்மையான ஜனநாயக அடிப்படையில் செய்யப்படும் காரியமல்லவென்றும், இங்ஙனம் செய்வது ஆங்கிலேயர்களின் தன்முனைப்பு ஆட்சியைவிட மிகவும் ஆணவபலம் வாய்ந்த சுயநல ஆட்சியென்றும் கூறுவதுடன், தமிழ்நாட்டில் இந்தியோ அல்லது இந்துஸ்தானியோ புகுத்தப்படுவது அடாத — தேவையற்ற காரியம் என்றும், மீறிப்புகுத்தினால் எதிர்ப்பதென்றும் முடிவு செய்து, அம்முடிவை 10–8–48ல் இருந்து நடைமுறைக்குக் கொண்டு வருவதென்றும் தீர்மானித்து, அதன்படி காரியங்கள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# திராவிட நாடு

காஞ்சி] 8—8—48 [ஞாயிறு


# ஆகஸ்ட் பத்து!

✲

ஆம்! ஆகஸ்ட் பத்து!!

சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாள்!

அருமை மொழியாம் தமிழினைக் காக்க அறப்போர் தொடுக்கும் நாள் தான் அது.

இந்தியை ஒழிக்க எடுத்துக் கொள்ளப்படும் நேரடி நடவடிக்கை ஆகஸ்ட் பத்தில் ஆரம்பிக்கப்பட்டதென்பதைக் குறிப்பிடும் நாள்தான் அது.

தமிழ் மக்களின் கலாசாரத்தைக் காக்கக் கடுஞ்சிறை புகுந்த நாள் என்பதைக் குறிப்பிடுவதுதான் ஆகஸ்ட் பத்து.

விடுதலை பெற்ற நாட்களில் தமிழ் மக்கள் விலங்கிடப்பட்டனர் என்பதைக் குறிப்பிடும் நாள்தான் ஆகஸ்ட் பத்து.

அந்நிய ஆங்கிலேயரை விரட்டி அடிமைத் தளையை அறுத்த விழாவினைக் கொண்டாடும் நாளில், நாட்டின் சொந்தக்காரராகிய தமிழ் மக்களையே அடிமைத் தளையால் பிணைத்து அவதிப்படுத்தினர் ஆணவக்காரர் என்பதனை குறிப்பிடும் நாள் தான் ஆகஸ்ட் பத்து.

இன்று அரசியலின் பேரால் செய்யப்படும் சீர்திருத்தங்களை யார் அடிகோலி, அவை, சட்ட பூர்வமாகச் செய்யப்பட வேண்டுமெனறு பாடுபட்டனரோ, அவர்களுக்கு நன்றி செலுத்துவதற்குப் பதிலாகச், செய்ந்நன்றி கொன்ற முறையில், அவர்களையே சிறையில் அடைக்கும் அடக்குமுறையை ஆளவந்தவர்கள் கடைப்பிடித்தனர் என்ற கொடுமையைக் குறிப்பிடும் நாள்தான் ஆகஸ்ட் பத்து.

நாட்டுக்குக் கேடுதேடும் நயவஞ்சகர்கள், உலகம்போற்றும் உயிரனைய தமிழ் மொழியை உருக்குலைத்தனர் என்பதனை உணர்த்தும் நாள்தான் ஆகஸ்ட் பத்து.

தமிழ் மக்களின் தன்மானமும், தமிழ்மொழியின் தனித்தியங்கும் தகைமையும் காக்கப்பட்டதென்பதைக் குறிப்பிடும் நாள்தான் ஆகஸ்ட் பத்து.

ஆளவந்தவர்களின் அறியாமையையும், ஆணவ ஆட்சிமுறையையும் அவனி அறியும்படி செய்யப்பட்டதென்பதைக் குறிப்பிடும் நாள்தான் ஆகஸ்ட் பத்து.

திராவிடத் தனி அரசு ஏன் கேட்கப்படுகின்றதென்ற உண்மையை உலகம் உணர்ந்து ஒப்புக் கொள்ளும்படி செய்ததென்பதைக் குறிப்பிடும் நாள்தான் ஆகஸ்ட் பத்து.

* * *

1947-ல் ஆகஸ்ட் பதினைந்து! ஆம்! அது, இந்தியா என்றழைக்கப்படும் இவ்வுபகண்டம் ஆங்கிலேய ஏதேச்சாதிகாரப் பிடியினின்றும் விடுபட்ட நாள்.

1948-ல் ஆகஸ்ட் பத்து! ஆம்! இது, ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்திலன்றி வேறெந்தக் காலத்திலும் இவ்வுபகண்டத்தோடு ஒன்றுபட்டு—ஒரு அரசியலின் கீழ் திராவிடநாடு இருந்ததில்லை — இனியும் இருக்க முடியாது-கூடாதென்டதை மொழிப் போராட்டத்தின் வாயிலாக விளக்கித், தமிழ்மொழியின் தூய்மையையும், தமிழ் மக்களின் கலாச்சாரத்தையும் காப்பாற்றித், திராவிட மக்கள் விடுதலை பெறுவதற்காக அறப்போர் தொடுக்கும் நாள்.

ஆகஸ்ட் பதினைந்து, ஒரு ஆகஸ்ட் பத்தை உண்டாக்கி விட்டதென்பதைக் குறிப்பிடும் நாள்.

ஆகஸ்ட் பத்து, ஆகஸ்ட் பதினைந்தின் முதல் ஆண்டுவிழாக் கொண்டாடும் சமயத்திலேயே தமிழ் மக்களைச் சிறைக்குள் செல்ல வைத்ததென்பதை உணர்த்தும் நாள்.

எனவே, இந்தி எதிர்ப்புப் போர் மூண்டுவிட்டது! இனி எவர் தடுத்தாலும் நிற்கப்போவதில்லை. தமிழ் மக்களின் உணர்ச்சி தடுக்கமுடியாத அளவுக்கு வளர்ந்துவிட்டது. தமிழ் நாட்டின் நாலாபக்கங்களிலும் இருந்தும் அறப்போருக்குத் தயார் என நாள்தோறும் கடிதங்கள் வந்தவண்ணம் இருக்கின்றன. இந்த அறப்போர், ஒன்று, வெற்றி அல்லதுசாவு என்ற துணிச்சலோடு காரியமாற்றும் நிலைமைக்கு வந்துவிட்டோம். போர்க்களம் புகுந்தோர் புறமுதுகு காட்டுவது தமிழர் மரபல்ல. வெற்றி மாலை சூடுவது—அல்லது போர்க்களத்தில் மடிவது—இதுவே தமிழர் மரபு. எனவே கடைசிமுறையாக ஒரு கை பார்த்துவிடுவது என்ற முடிந்த முடிவோடு, துணிந்து போர்க்களம் புகவேண்டும். இதுவே எமது வேண்டுகோளாகும்.

நாம் இந்த அறப்போரை, அரசியலாருக்கு அறிவிக்காமலேயே தொடங்கவில்லை. இந்திக் கட்டாயக் கல்வியினால் தமிழ் மக்களின் மொழி—கலை—நாகரிகம் முதலியன வளர்ச்சி குன்றிச் — சீர்குலைந்து — மறைந்துவிடுமெனவும், அதனால் தமிழ் மக்களின் எதிர்கால முன்னேற்றம் தடைப்படுமெனவும், ஆகவே அந்நிய மொழியாகிய இந்தியைத் தமிழ் மக்களின் விருப்பத்திற்கு மாறாக அவர்களிடம் கட்டாய முறையில் நுழைப்பது ஜனநாயக ஆட்சி முறையை நடத்துவதாகச் சொல்லிக்கொள்ளும் அதிகார வர்க்கத்தாருக்கு அடாதெனவும் எத்தனையோ பொதுக் கூட்டங்களும், மாநாடுகளும் கூட்டிக் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றி அவற்றைச் சர்க்காருக்கு அறிவித்த பின்னரே இப்போராட்டம் துவக்கப்படுகிறதென்பதையும் இங்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆனால், சர்க்கார் இந்தி எதிர்ப்புக்காரர்களை எல்லாம் "வகுப்புவாதிகள்" என்று வாய் கூசாது கூறுவதுமன்றித், தனக்கிருக்கும் அதிகார இறுமாப்பினால் தமிழ் நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்களில் எல்லாம் இந்தி மொழியைக் கட்டாய பாடமாக்கி விட்டது.

இந்தி எதிர்ப்புப் போர் ஆகஸ்ட் பத்தில் ஆரம்பிக்கப்படும் என்று அறிவித்த பின்னரும், கல்வியமைச்சர், சொல்லிக்கொடுத்ததைச்சொல்லுமாம் கிளிப்பிள்ளை என்பதுபோல், இந்திபற்றிய தம்முடைய கருத்தை, ஏதோ, அதில் மாறுதல்செய்து விட்டதாக மக்கள் நினைப்பார்கள் என்றும், அதனால் இந்தி எதிர்ப்பு அவசியமற்ற காரியமென்று கருதி அதனை மக்கள் வெறுப்பர் என்றும் கருதி, நாள்தோறும் ஒருமுறை வெளியிட்ட அறிக்கையையே திரும்பத் திரும்ப வெளியிட்டுக்

கொண்டிருக்கிறார். இதுமட்டுமல்ல, இன்றைய சர்க்கார் இந்தி எதிர்ப்பை அடக்க ஒரு புது முறையையும் கண்டு பிடித்திருக்கிறது. அதாவது,

"சென்னை நகரத்தில் சிலர் இந்தி எதிர்ப்பு இயக்கம் சம்பந்தமாகச் சில செகண்டரி பள்ளிக்கூடங்கள் முன் மறியல் செய்வது சம்பந்தமான யோசனை ஒரு அதிகாரியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அதைச் சர்க்கார் உறுதியுடன் சமாளித்து உறுதியான நடவடிக்கை எடுக்குமென்று அந்த அதிகாரி பதில் அளித்தார்."

என்ற ஒரு செய்தி 'தினமணி' என்ற பத்திரிகையில் காணப்படுகின்றது. எனவே, இந்தி எதிர்ப்பியக்கத்தை எதிர்த்து நடவடிக்கை எடுத்துச் சமாளிக்கும் ஆற்றல் சர்க்காருக்கு உண்டென்பதை ஒரு அதிகாரியின் (அந்த அதிகாரி எந்தத் துறைக்கு அதிகாரியோ தெரியாது) வாயிலாகச் சர்க்கார் இந்தி எதிர்ப்பாளர்களை மிரட்டும் புதுமுறை, ஏற்கனவே, முடிவு செய்யப்பட்ட இந்தி எதிர்ப்பு அமைப்பைக் குலைத்துவிடாதென்பதை, வேறொருவரை விட்டு மிரட்டிப்பார்க்கும் சர்க்காரைப்போலன்றி, நாம்நேரடியாகவே கூறுகின்றோம்.

எனவே, இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டுப் பணிபுரியத்தயாராய் இருக்கும் தோழர்கள் ஆகஸ்ட் பத்தை நினைவில் வைத்துக்கொள்ளும்படியும், இதனால் ஏற்படும் விளைவுகளை ஏற்கத் தயாராய் இருக்கும்படியும், தலைவர்களின் ஆணை பிறந்தவுடன் கடமையைச் செய்ய முன்வரும்படியும் கேட்டுக்கொள்கிறோம்.

—✻—

10-ம் பக்கத் தொடர்ச்சி

வேணு அவர்களின் நன்றியுரையுடன் மாநாடு இனிது முடிவுற்றது.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் :—

17–7–48-ல் சென்னை, செயிண்ட் மேரி மண்டபத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாகாண மாநாட்டை வரவேற்பதுடன், இந்தியை ஒழிக்க உடனே நேரடி நடவடிக்கை எடுக்குமாறு செயற்குழுவினரை வேண்டுவதுடன், இம்மாணவர் மாநாடு இம்முயற்சிக்கு எல்லாவிதமான உதவியையும் ஒத்துழைப்பையும் தருவதாக உறுதி கூறுகிறது.

# என் நன்றி

அறப்போர்,

ஆகஸ்டு 10-ந் தேதி ஆரம்பமாகிறது—ஆற்றல் மிக்க திராவிடத் தோழர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த 'அழைப்பு' கிடைத்துவிட்டது.

அறப்போர்,

அதிகாரம் கிடைத்துவிட்ட காரணத்தால், எதையும், எப்படியும் செய்துவிட முடியும் என்ற அரசியல் ஆணவத்தின்மீது அமர்ந்திருக்கும் அரசியலாருடன்.

அறப்போர்,

தமிழ் மொழியின் தொன்மையையும், தூய்மையையும், தாயகத்தின் தனிப்பண்பையும், துச்சமென்றெண்ணிடும் போக்கினரின் ஆகாவழித் திட்டத்துடன்.

அறப்போர்,

தொடுக்கும் நாம், ஆட்சிப் பீடத்து அமர்ந்திருப்போருக்கு இன்றுள்ள பலம், பிரசார சாதனம், பண பலம், மேலிடத்து ஆதரவு, எவ்வளவு அதிகம், என்பதை அறிந்து இருக்கிறோம்.

அறப்போர்,

தொடுக்கும் நாம், அதனால் அரசியல் இலாபம், சில்லரைச் சலுகைகள், வியாபார வசதிகள், பதவித் துண்டுகள் பெறும் எண்ணம் கொண்ட பேதைகள் அல்ல—மூதாதையர் காலமுதல் இருந்துவரும் மொழியையும், அதன் வழி அமைந்திருக்கும் பண்பாட்டையும், காப்பாற்றவே போர் தொடுக்கிறோம்

அறப்போர்,

கட்டுப்பாடு, சகிப்புத்தன்மை, இவைகளை, அடிப்படையாகக் கொண்டதாக இருக்கவேண்டும்.

அறப்போர்,

ஆட்சியாளர்களிடம் இன்று உள்ள பலவித அடக்குமுறைகளையும், தாங்கிக் கொள்ளும் உள்ள உரம்கொண்டவர்களின், உற்சாகத்தை நம்பியே தொடுக்கப்படுகிறது.

அறப்போர்,

இழித்தும் பழித்தும் பேசப்படும்—ஏளனம் கண்டனம் ஏராளமாகக் கிளம்பும்—இவைகளைக் கண்டு கலங்காத உள்ளம் வேண்டும்.

அறப்போர்,

தொடுக்கும் நாம், இன்று அறிந்திருக்கும் அளவு, திராவிடப் பண்பினை அறியாதிருக்கும் திராவிடர்கள் பலர், ஆளவந்தார்களின் ஆட்சியிலே உள்ளனர் என்பதை அறிந்து, அவர்களின் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும், ஆதரவையும், ஒத்துழைப்பையும் பெறுவதற்கான முறையிலே, பணி புரியவேண்டும்.

அறப்போர்,

தொடுக்கும் நம்மீது ஆட்சியாளர் வீசும் அடக்குமுறை ஆயுதங்களால் நமது உடலிலே ஏற்படும் தழும்பும், ஒழுகும் இரத்தமும், இன்று திராவிடத்தை மறந்து, ஆளவந்தார்களுடன் சேர்ந்துள்ள, திராவிடத் தோழர்களை, நமது முகாமுக்குக் கொண்டு வந்து சேர்க்க திராவிடர் கழகம் அனுப்பி வைக்கும், தூதுவர்களாக அமையவேண்டும்.

அறப்போர்,

தொடுக்கிறோம்—அன்பழைப்பை ஏற்றுக்கொள்ள ஆயிரமாயிரம் இளைஞர்கள் ஆர்வத்துடன் உள்ளனர் என்ற நம்பிக்கையுடன்.

அறப்போர்,

துவக்கமும், முதல் படைத்தலைவனாக (சர்வாதிகாரியாக) இருக்கும் சிறப்பிடமும், வாய்ப்பும், எனக்கு அளித்த, நமது தலைவர் பெரியாருக்கு, என் நன்றி; கமிட்டியாருக்கும் கழகத்தாருக்கும் என் நன்றி.

அறப்போர்,

நடாத்த, உங்கள் பேராதரவை நம்பி, ஒப்புக்கொண்டுவிட்டேன்—படை வரிசையில் வந்து நில்லுங்கள், என்று உங்களை அழைக்கிறேன்.

அறப்போர்,

ஆரம்பமாகிறது—வருக! வருக! வெல்க!

இங்ஙனம்,

**அண்ணாத்துரை**
1-வது சர்வாதிகாரி!

## திரண்டெழுவீர் திக்கெட்டும்!

12-ம் பக்கத் தொடர்ச்சி

செய்யவேண்டாமா? இலக்கணம், இலக்கியம், விஞ்ஞானம், வீரம் நிறைந்த நாடென்பதை விளக்க வேண்டாமா? நம் தமிழ் நாட்டை உங்கள் உடல், உயிர், சொத்து அனைத்தையும் ஈடு வைத்துத் தன்னுடாக்கக் கிளம்புங்கள் தக்கோர்களே. தாமதம் அழிவுக்குக் கொண்டுபோய் நிறுத்தும். தனிநாடாகும் வரை போரிடச் சூளுரைகொண்டு புறப்படுங்கள். பொன்னாட்டை அடிமைத்தளையினின்று நீக்கப் புறப்படுங்கள். மங்கள சங்கநாதம் கிளம்புகிறது! சொந்த நாட்டுச் சேவை புரிய உங்களை நான் அழைக்கின்றேன். உலகத்தில் தனி நாடாக உலவும் இத்தாலி, ஜப்பான், ரஷ்யா முதலிய நாடுகள் நம் அகக்கண் முன்னால் நிற்கின்றன. எனவே, உறக்கம் இனியும் வேண்டாம்! தாமதம் செய்தால் துயர்ப்படுவீர்கள். மொழிக்காக ஒற்றுமைவழியில் சேருவோம்; விடுதலைப் படையில் சேருவோம் வாருங்கள். தமிழ்நாட்டைத் தன்னுடாக்குவோம் வாருங்கள்! சீரிழந்த நாட்டைச் செம்மைப்படுத்தஉடனே வாருங்கள்! வாருங்கள் என அழைக்கின்றேன்!

செல்வம் படைத்த செம்மல்களே! உண்பது, உடுப்பது, உறங்குவது தான் மானிடப் பிறவியின் தன்மை என்றால், அப்படிப்பட்ட மானிடப் பிறவி மாய்ந்தொழியட்டும்; அது மிருகப் பிறவியேதான். பின் மானிடப்பிறவியின் தன்மைதான் என்ன? ஒருஇலட்சியத்தை சாதிப்பதுதான்—ஒருகொள்கையை நிலைநாட்டுவது தான் மானிடப் பிறவியின் நீங்காக் கடமை. அப்படிப்பட்ட பிறவியின் தன்மையை அநேக ஆண்டுகளாக நாம் மறந்திருந்தோம். அதை நிறைவேற்றும் நாள் நம்மை நெருங்கிவிட்டது. இளைஞர்களும்,பெரியோர்களும் தோள்தட்டித் திரண்டெழுந்துவிட்டார்கள்; இனி, நாங்கள் பூனைகளல்ல, புலிகள் என்று சிறு நரியைக் கண்டு சிங்கம் இனியும் சும்மா இராது என்று சினந்து எழுந்துவிட்டனர். ஆகவே, ஆடம்பர வாழ்க்கையை அளவுபடுத்திக்கொண்டு நாட்டுப் பணிக்கு உங்கள் பொருளை உபயோகப்படுத்துங்கள்! போர் துவளாதிருக்க உங்கள் பெருந்துணை அவசியம் தேவை. பெருந்தொகை தேவை! அள்ளிக்கொடுங்கள் அயராது! அன்னிய மொழியை அகற்ற உதவி புரியுங்கள். அடிமைத்தனத்தை அகற்ற அன்புடன் வாருங்கள் என அழைக்கின்றேன்.

தமிழ்நாட்டுப் பொதுமக்களே! வாழ்வைக் காணிக்கையாகவைத்து, வளமிழந்த நாட்டை வளம்பெறச் செய்ய நல்ல சமயம் உங்களுக்குக் கிடைத்துள்ளது. தமிழ் மக்களாகிய நாம் இன்னும் எவ்வளவு காலம் விலங்குகளாகக் காலத்தைக் கடத்துவது? கடமையைமறந்து எத்தனை நாள் காரிருளில் உழல்வது? புரோதப் புரட்டரின் ஆட்சியை இன்னும் எத்தனை நாளைக்கு வளரவிட்டு நாம் வளமிழந்து வாடி நிற்பது. நம் மூதாதையர் செய்த குற்றத்தையே நாமும் எவ்வளவு காலம் செய்துகொண்டிருப்பது? நம் பின் சந்ததியாவது மானமுள்ளவர்களாக—மறத்தமிழர்களாக வாழ முயற்சி செய்ய வேண்டாமா?

உங்களாலான எல்லா ஆதரவுகளையும் இவ் அறப்போருக்கு அளியுங்கள். நீங்களும் கச்சை வரிந்து கட்டிக்கொண்டு கலாசாரப் போராட்டத்தில் கலந்துகொள்ளுங்கள்! உங்கள் மக்களையும் முதலில் அனுப்பிவையுங்கள். அகலட்டும் அடிமைத்தளை! அழியட்டும் ஆரியப் பூண்டு! ஓங்கட்டும் தமிழின் ஒளி. உயரட்டும் தமிழ் நாடு!

தமிழால் தம் உடம்பையே வளர்க்கும் தமிழ்ப் புலவர்களே! தமிழுக்கு ஆபத்து வந்துவிட்ட இந்த நேரத்தில் இனி என்ன செய்யப் போகிறீர்கள்! பழம் பெருமையையே பேசியா காலத்தைக் கழிக்கப் போகிறீர்கள்? காவிய ருசியையேவா ருசித்துக்கொண்டிருக்கப் போகிறீர்கள்? இனியும் நீங்கள் வாளா இருத்தல் நீதியாகாது! தமிழ் உங்களால் வளர்கிறது; வளம் பெறுகிறது; தமிழே உங்களால்தான் காப்பாற்றப் பட்டு வந்தது என்று கூறுவது உண்மையானால், வாய் வீரம் பேசுதலை விட்டு வாருங்கள் படை வரிசையின் முன்னணிக்கு! கூடுங்கள் நீங்கள் யாவரும்! கொக்கரியுங்கள் கொடுங்கோலர் குழியில் மறையுமட்டும்! முதற்பங்கு உங்களதாகத்தான் இருக்கவேண்டும். பழைமை பேசிப் பாவலை செய்தது போதும்! பழந்தமிழ்க்கே கேடு வந்ததைப் பாரும்! வழ வழ என்பதில் இனி ஏற்படும் தொல்லை! வாருங்கள் உடனே வம்பரின் தொல்லையைப் போக்க! வளமுள்ள தமிழைக்காக்க என்று உங்களை அழைக்கின்றேன்.

ஆம்; நீங்கள் எல்லோரும் வந்து தான் தீரவேண்டும். அதற்குப் பரிசு கேட்கிறீர்களா? உண்டு. பட்டினியால் பதைப்பீர்கள்; கொடுமையால் உழல நேரிடும், சிறை கிடைக்கும், அல்லது உயிர் துறக்கவும் நேரிடும்!

கொடுமைகளையும் இகழ்ச்சிகளையும் அட்டூழியங்களையும் அடைந்து, அன்னிய மொழியையும் அன்னிய ஆதிக்கத்தையும் அடிமைத்தனத்தையும் போக்குவீர்களானால், உங்கள் சரித்திரத்தை உங்கள் பின் சந்ததியார் போற்றிப் புகழ்வர்! உங்களது வாழ்வும் ஒரு இலட்சியத்துக்காகச் சென்றது என்ற இன்பம் தங்கும்! எனவே, திரண்டெழுவீர் திக்கெட்டும் எனக் கூறித் தலைவர்களின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நானும் போருக்குக் கிளம்பிவிட்டேன்.

●

## மாகாண மாணவர் இந்தி எதிர்ப்பு மாநாடு

சென்னை மாகாண மாணவர் இந்தி எதிர்ப்பு மாநாடு 1—8—48-ல் சென்னை மெம்மோரியல் மண்டபத்தில், பேராசிரியர் C. இலக்குவனார் எம். ஓ. எல். அவர்கள் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மாநாட்டுக்கு மாகாணம் முழுவதிலுமுள்ள மாணவர்கள் ஆயிரக் கணக்கில் வந்திருந்தனர் தலைவர் பெரியார் அவர்களும், தாய்மார்கள் பலரும் மாநாட்டுக்கு வந்து மாணவர்களுக்கு ஊக்கமளித்தனர்.

தோழர் கோ.மோ. சனார்த்தனம் பி. ஏ; அவர்கள் மாநாட்டைத் திறந்துவைத்தார்.

பின்னர், மாநாட்டுத் தலைவர் தோழர் இலக்குவனார் அவர்கள், தம்முடைய தலைமையுரையை விளக்கமாகவும் விரிவாகவும் மாணவர்களுக்கு எழுச்சியூட்டும் முறையில் பேசினார். அடுத்தபடியாகத் தலைவர் பெரியார் அவர்கள் மாணவர்களுக்கு எழுச்சியூட்டும் முறையில் விளக்கமாகப் பேசியபின், மாணவத் தோழர்கள் சுப்பய்யா, வஞ்சிக்கோ, அப்துல்காதர், ஆகியோர் உணர்ச்சி ததும்பப் பேசினர்.

பின்னர், தோழர்கள், குருசாமி, பி.ஏ; குஞ்சிதம் — குருசாமி பி. ஏ; எல். டி; டாக்டர் தருமாம்பாளம்மையார், எஸ். ஜி. பாலசுப்பிரமணியம், ஏ. பி. சனார்த்தனம், ஆர். இளம்வழுதி, இரா நெடுஞ்செழியன், டாக்டர் கிருட்டினசாமி, க. அன்பழகன், அண்ணாத்துரை ஆகியோர் பேசியதும், தோழர் ஏ. எஸ்.

(9-ம் பக்கம் பார்க்க)

# திரண்டெழுவீர் திக்கெட்டும்!

[வே. சம்பந்தன்]

புறப்படுவீர் போருக்கு! ஆம்; போருக்குத்தான்! பெருவாரியாகப் புறப்படுங்கள்! வாழ்வின் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் பேற்றைப் பெற்றுவிட்டீர்கள்! பிறந்த நாட்டிற்குப் பெரும் புகழை உண்டாக்கவேண்டிய பெரும் பொறுப்பு உங்களை நாடிவந்திருக்கிறது. மணமில்லா மலர் ஏன்? நீரில்லா ஆறு ஏன்? அதுபோலவே கொள்கையில்லா வாழ்க்கை ஏன்? ஒரு கொள்கையை—ஒரு இலட்சியத்தை நோக்கிச் செல்லாத வாழ்வெதற்கு?

வாழ்வைப் பயன்படுத்திக் கொள்ளவே—வளமிழந்த நாட்டை வளமுறச் செய்யவே போர் வந்துவிட்டது. இருண்ட நாட்டை ஒளிமயமாக்கவே, இந்திப்பாடையைச் செந்தமிழ் நாட்டிலே கொண்டுவந்துள்ளார்கள் ஆளவந்தார்கள். ஆகவே, தயக்கங் கொள்ளாது உடனே புறப்படுங்கள், செந்தமிழைக் காக்க, சீரிய தமிழர் தம் கலையினைக் காக்க, கலாசாரத்தைக் காக்க என்று உங்கள் அனைவரையும் அழைக்கின்றேன். வாழ்வு நிலையல்ல என்பான் வேதாந்தி; வாழ்வு நிலையுள்ளது என்கிறான் புத்துலகச் சிற்பி. வாழ்வு சுமை என்கிறான், பழமை விரும்பி—எனவே, பரமன் அருள்பெறப் பக்தியில் ஈடுபடு என நமக்குப் போதிக்கிறான். வாழ்வு சுமையல்ல, ஓர் வாய்ப்பு; அதைக் காலத்திற்கும் கருத்திற்கும் ஏற்றவகையில் பயன்படுத்திக்கொள்ளச் சொல்லுகிறான் புத்துலகைக் காண விழையும் பெரியோன். எனவே, அப்படிப்பட்ட நல்ல வாய்ப்பு நமக்கு இன்று கிடைத்துள்ளது. கிளம்புவோம், கொடுமையை எதிர்க்க, இந்தியை எதிர்க்க! தமிழினைக் காக்க, தமிழின் மாண்பினை ஓங்கச் செய்ய என்கிறேன்.

உறுதிகொண்டுவாருங்கள்! உள்ள உரம் கொண்டு வாருங்கள்! ஆணந்தங்கொண்டு வாருங்கள்! தியாகத்தின் சின்னத்தைப் பெற வாருங்கள்! தாழ்ந்த தமிழ் நாட்டை மீண்டும் உயர்நிலை பெறச் செய்யும் சீரிய பணியில் முன்னணியில் நிற்க வாருங்கள்!

"காரிருளால் சூரியன்தான்
மறைவதுண்டோ,
கறைச் சேற்றால் தாமரையின்
வாசம் போமோ?
பேரெதிர்ப்பால் உண்மைதான்
இன்மையாமோ?
பிறர் சூழ்ச்சி செந்தமிழை
அழிப்பதுண்டோ?"

என்ற புரட்சிக்கவி பாரதிதாசனின் பண்ணை உளத்தில் கொண்டு தியாகத் தீயில் குளிக்கத் திரண்டு வாருங்கள்!

நாம் உண்மையை நிலைநாட்டப் புறப்படுகிறோம்! வரையில்லா நம்பிக்கையும் குலையாத ஊக்கமும் நம்முடன் பிறந்தவை என்று எத்தனை தடவை மார்தட்டிக் கூறியிருக்கிறோம். அதனை உண்மைப்படுத்தும் காலம் நமக்குக் கிட்டியுள்ளது. இச்சகத்துளோரெலாம் எதிர்த்து நின்றபோதிலும், அச்சமென்பது நமக்கேது? பிறந்த நாட்டையும், பிறந்த மொழியையும் காப்பாற்றத் தடை என்ன இருக்கிறது? அப்படிப்பட்ட தடையை தூள் தூளாக்கக் கிளம்புங்கள் போருக்கு!

விடுதலையின் முரசைக் கொட்டி விட்டோம். வெற்றிச் சங்கு ஊதிவிட்டோம். போர் தொடுத்து விட்டோம். தமிழைக் காக்க மட்டும் போரல்ல. பந்தம் எங்கேயோ, பேடித்தன்மை எங்கேயோ, மூட எண்ணங்கள் எவ்விடத்திலோ, குறுகிய நோக்கம் எங்கோ, குள்ளநரி மனப்பான்மை எங்கு தாண்டவமாடுகிறதோ அங்கெல்லாம் நாம் அறிவுக் கோடரியும் கையுமாகப் புகுந்து நிர்மூலமாக்கப் புறப்படுவோம்!

மனிதவாழ்வு உண்மை! உண்மை!! உண்மை!! எனவே நாம் சுதந்திரம் வேண்டுகிறோம்! செந்தமிழைச் சிதைவுசெய்யக் கிளம்பியுள்ள சட்டங்களை உடைத்தெறியக் கிளம்புவோம!

நம்மால் எல்லாம் ஆகும்! நாம் எதையும் செய்ய முடியும்!! நம்முடைய ஒன்றுபட்ட ஆற்றலினால்தான் நம் மொழி, கலை, கலாச்சாரம் வளரவேண்டும். எவ்வளவோ காலங்களுக்குப் பிறகு நம்மை நாம் உணர்ந்தோம்! நம் நிலையை உணர்ந்துள்ளோம்! நம்மைக் கெடுக்கும் நயவஞ்சகக்காரர்களை நாட்டினின்று விரட்ட முற்பட்டுவிட்டோம். இனி நம்மை யார் அடக்க முடியும்? நம் கிளர்ச்சி உண்மையின் மீது உண்டாக்கப்படுவது—கட்டப்படுவது. எனவே, கவலை நமக்கேது. காரியமாற்றக்கச்சையைவரிந்து கட்டிக்கொண்டு, கடமையைச் செய்ய கூட்டமாகப் புறப்படவேண்டியதுதான். எழுங்கள்! விழித்தெழுங்கள்! அதோ திருவிட உதயம் உதித்துவிட்டது! வாருங்கள் ஒன்றாக!

தமிழ் இளைஞர்களே! தயார்தானா? தயக்கங்கொள்ள ஏதாவது தகுந்த காரணம் உள்ளதா? இல்லை. எனவே நீ, நான் என்று போட்டியிட்டுப் புறப்படுங்கள்! வரட்டும் போர் என்று கூறினீர்கள்! எப்பொழுது போர் என்றீர்கள்! இதோ போர்! தமிழைக் காக்கப் போர்! தமிழரின் பண்பாட்டைக் காக்கப்போர்! தமிழரின் தன்மானத்தை நிலை நாட்டும் போர்! வடநாட்டுக்கும் தென்னாட்டுக்குப்போர்! காட்டிக்கொடுக்கும் கங்காணிகளின் காட்டுக் கூச்சலைக்கண்டு எள்ளி நகையாடுங்கள்! நம்மைக் கெடுத்த குருட்டு நம்பிக்கைகளையும் புராணக் குளறுபடைகளையும் நம்பி இனியும் நாம் ஏமாறுவதா? இளைஞர்களாகிய நமக்கு ஓர் நல்ல வாய்ப்பு நம்முடைய வாழ்க்கையிலே ஏற்பட்டுள்ளது. ஒரு குறிக்கோள் நமக்குக் கிடைத்துள்ளது. வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் வெற்றி பெறக் கிளம்புங்கள்! சமுகத்துறையிலும், பொருளாதாரத் துறையிலும், அரசியலிலும், மற்றும் எல்லாத்துறையிலும் உண்மையின் சுடரை ஏற்றி ஒளிபெறச் செய்வோம்!

இளமையின் எல்லையை ஏறும் போதுதான் எதையும் செய்ய இயலும். இளைஞர்களால் முடியாதது எது? தோள்வன்மையும், புத்திவன்மையும் இளைஞர்களாகிய நம்மிடம் பரிணமிக்கிறது. இந்த இரண்டுவித பலத்தினால்தானே எந்த நாடும் முன்னேறமுடிந்தது!


அந்நிய நாட்டு வரலாற்றேடுகளை புரட்டிப் பார்க்கும்பொழுது ஒவ்வொரு ஏடும் எடுத்துக் கூறுகின்றது இளைஞர்களின் தீரத்தை! இளைஞர்களாலதான் அந்த பூட்டப்பட்டிருந்த இரும்புத்தளைகளெல்லாம்

உடைத்தெறியப்பட்டன என்று. இளைஞர்களின் கீர்த்திதான் ஒளியுள்ள எழுத்துக்களால் தீட்டப்பட்டிருக்கிறது. இளைஞர் ஒத்துழைப்பினல்தான் முடிமன்னர்கள் அரியாசனம் ஏறியிருக்கிறார்கள். ஆகவே, உங்களுடைய வலிமையைப்பரிசோதிக்க ஓர் நல்லவாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது! எழுங்கள்! இளைஞர்களை அடக்க யாரால் முடியும்? நம்முடைய பணி மகத்தானது. உண்மையானது இளைஞர்களின் கிளர்ச்சிதான் எட்டுத்திக்கும் பரவக்கூடியது. இளைஞர்களின் கிளர்ச்சி பெற்ற நாடுகள் தலைதூக்கி நின்று, நமக்கு நம்பிக்கையைஉண்டாக்குகின்றன. எனவே இளஞ்சிங்கங்களே! செந்தமிழ் நாட்டுச்சீரிய செல்வங்களே! தாய் நாட்டைக்காக்க தருணம் வாய்த்திருக்கிறது. உங்கள்மாற்றைப்புடம் போடும் நேரம் வந்திருக்கிறது. புற்றீசல்போலப் புறப்படுங்கள்! புன்மையை விரட்டியடியுங்கள்! போலியைப்பொசுக்குங்கள்! உண்மையை நிலை நாட்டுங்கள்! செந்தமிழ் நாட்டில் தமிழன்னையை அரியாசனம் ஏற்றப்பணிபுரிய பவனி புறப்படுங்கள்! புல்லர்களை புறங்காட்டி ஓடச் செய்யுங்கள்!

தமிழ்நாட்டுப் பெரியீர்! எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் நம் ஏமாளித்தனத்தின் காரணமாக, நம் நாட்டுக்கலாச்சாரம், கலை, பண்பு, பண்பாடு முதலியவைகள் அயலார்களால் அழித்தொழிக்கப் பட்டது. அதற்குக் காரணம் பெரியவர்கள் தான். எனவே, நம் முன்னோர் செய்த தவறைத் திருத்தும் பணி உங்களுடையதே! தமிழையும் தமிழ் நாட்டையும் தாரணியெங்கும் புகழ் பாடச் செய்ய வேண்டுவது உங்கள் பொறுப்புத்தான்; தமிழின் மேன்மையையும், தமிழரின் பண்பாட்டையும் மேம்படச் செய்யும் நிலை இன்று வந்துள்ளது. இந்தக்காரியம் இனிது நிறைவேறவழி, ஒவ்வொரு தமிழனின் உயிர்க்கொள்கையாய் இருக்க வேண்டும்.

அடிமை மனப்பான்மையை அகற்றுங்கள்! அன்னியனுக்கு மதிப்புத் தராதீர்கள்! தன்மானத்தை விற்காதீர்கள்! தமிழ்நாட்டைத் தாழ்ச்சியுறச் செய்தது போதும், இனியும் அப்பணியினையே செய்து செம்மை குலையவைக்காதீர்கள், செந்தமிழ் நாட்டை! கெட்டது போதும்! கொடுமை அடைந்தது போதும்! கொள்ளை கொடுத்தது போதும்!! செய்த தவறுக்குக் கழுவாய் தேடப் புறப்படுங்கள். தமிழ் நாடு தனித்து வாழ்ந்த நாடு! தமிழ் மொழி தனித்தியங்கும் மொழி! தமிழ்க்கலை தரணியெங்கும் தவழ்ந்தகலை, தமிழ்ப்பண்பாட்டைப் பேசாதநாடேது? அப்படிப்பட்ட நாடு இன்று அடிமைத்தளையிலே அகப்பட்டு அல்லலுறுவதைக் காணீர்! கண்டு இனியும் வாளா இருப்பது அழகல்ல. காலம் நம்மை அழைக்கிறது! ஆம்; கடுஞ்சிறை உங்களுக்காகக் காத்துக்கிடக்கிறது. அன்னியரா உங்களை இப்பொழுது அளந்து பார்க்கிறார்கள்? இல்லை; இல்லை. நம் கோடரிக்காம்பின் கொடுஞ்செயலேதான் இதைச் செய்ய இன்று கிளம்பியுள்ளது. அதற்கு தூபமிடுகிறான் அன்னியன்! ஆம் அன்னியன்தான். யார், தன் தாய்மொழியைப் புறக்கணிக்கிறார்களோ, அழிக்கப் புறப்பட்டார்களோ அவர்கள் யாவரும் அன்னியர்களே! அதில் அணுவளவும் சந்தேகமில்லை. அவிநாசியாரா அழிக்கிறார் அருந்தமிழை! ஆம்; அவர்தான் ஆரியரின் கை அம்பாக மாறி அருந்தமிழை அழிக்கதிட்டம் தீட்டிவிட்டார். தீந்தமிழைத்தொலைக்கத் திட்டமிட்டு விட்டார். தற்குறித் தன்மை நிறைந்துள்ள நாட்டிலே தேசிய மொழியென ஒன்று திணிக்கப் படுகின்றது. கலையை அழித்த காதகர்கள், பண்பாட்டைப்புதைத்த புல்லர்கள், இன்று மறைவிலிருந்து தமிழையும் அழிக்கத் திட்டம் தீட்டி விட்டார்கள், நம்மவர்களைக் கொண்டே! இந்த நாசகாலவேலையை எத்தனைநாள் பொறுத்துக்கொண்டிருப்பது! எத்தனை நாளைக்கு இந்தக் கொடுங்கோலரை விட்டுவைப்பது! கோழைகளா நாம்? தமிழ் நாட்டு இரத்தம் ஓடவில்லையா நம் உடம்பிலே. அப்படியானல் உந்துமே அறப்போர் வீரனகப் போ அட்டியில்லாமல் என்று உன் உள்ளமே! பெரியோர்களே! இளைஞர்கள் புறப்பட்டு விட்டார்கள், போருக்கு, தங்கள் தமிழைக்காக்க. எனவே, நீங்களும் அந்த அடிச்சுவட்டைப் பின்பற்றத் தயாராய் இருங்கள். நமக்குக் கேடுவந்து சூழ்ந்தபோதுமா, சும்மா இருப்பது? நமக்கென இருக்கும் நாட்டை இனி விடுவதா? அந்த நாட்டை நமக்குப் பயன் தருமாறு உபயோகித்துக்கொள்ள வேண்டாமா? நம்நாட்டைப்புதுமை

10-ம் பக்கத்தில்



## அந்தத்துணிவு பிறக்குமா?

4-ம் பக்கத் தொடர்ச்சி

பெறும் அன்பர்களைக் கேட்கிறோம், நாட்டிலே, நமது நாட்களில், நடைபெறும், இந்தக் கூட்டுச் சதியைப் பற்றி என்ன எண்ணுகிறீர்கள், எப்படிச் சகித்துக் கொள்கிறீர்கள்! பார்ப்பனரால், எத்தகைய நிலையிலும், ஆட்சியின்போதும், தங்கள் நலனைப் பாதுகாத்துக் கொள்ளவும், தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டவும் முடியும், என்று கூறும்போதெல்லாம், செத்த பாம்பை அடிக்கும் 'சித்த ஸ்வாதீன' மற்றவர்கள் என்று எம்மை ஏளனம் செய்தீர்களே, இப்போது என்ன சொல்கிறீர்கள்! என்ன ஆனுர் அமைச்சர்! சட்டசபையிலே உள்ள மெஜாரடி பலம் எதற்கு உதவிற்று? காங்கிரஸ் கட்சிக்குள் கிடைத்துள்ள பேராதரவுதான் எதற்குப் பயன்பட்டது! இதோ மேலிடத்துக்குத் தூபமிட்டு, திட்டத்தை உருக்குலைக்க முடிகிறதே அவர்களால், வெட்கமும் துக்கமும் நெஞ்சைப் பிய்த்துவிடுகிறதே—என்ன சொல்கிறீர்கள் இந்த நிலைமைக்கு?—என்று கேட்கிறோம்.

இவ்வளவும், காண்டீபம் கூறுவது போல, வெள்ளிக் காசுகளுக்காக!!

இப்படிப்பட்டவர்கள் இன்னமும், சட்டசபையிலே, 'ஜாம் ஜாமென' வீற்றுக்கொண்டுதான் இருக்கிறார்கள்—மகிமை வாய்ந்த காங்கிரஸ் சபையின் மாணிக்கங்களாக!!

காண்டீபம் எழுதியிருப்பது முழுவதையுமே வெளியிடுகிறோம், கருத்தூன்றிப் படித்துப் பாருங்கள்.

"ஜமீந்தாரி, இனும்தாரி எதிர்ப்பு மசோதா பழையபடியும் ரகளையைக் கிளப்பிவிட்டிருக்கிறது. மத்திய பார்லிமெண்டரி போர்டார் யோசனையை சென்னை சர்க்கார் கேட்க மறுக்கிறார்களென்றும், ரெவின்யூ மந்திரி காளா வெங்கட்டராவ் தன்னிஷ்டப்படி நடக்கிறாரென்றும் வரதாச்சாரி கம்பெனி கூப்பாடு போடுகிறது. இதை ஒட்டிப் பல பத்திரிகைகள் தலையங்கங்கள் தீட்டிவிட்டன. இனும்தாரி ஒழியவேண்டுமென இப்பத்திரிகைகள் எழுதியிருக்கின்றனவோ என்று யாரும் சந்தேகப்பட வேண்டியதில்லை. சென்னை சர்க்கார் இப்படி நடக்கப் போச்சா என்றுதான் எழுதியிருக்கின்றன. இனும்தாரி ஒழிப்புக்கு இவர்கள் ஆதரவு காட்டுவார்களென்று எதிர் பார்ப்பதே தப்பு. திருடன் திருட்டுத் தொழிலைக் கண்டிப்பான் என்று எதிர்பார்ப்பது எப்படியோ, அப்படிதான் மவுண்ட்ரோடு பெருச்சாளிகள் இனும் ஒழிப்புக்கு ஆதரவு காட்டுமென எதிர்பார்ப்பதாகும்.

மத்திய பார்லிமெண்டரி போர்டாருக்கு சென்னை சர்க்காரின் இந்த மசோதாவில் பெரும் தொல்லை ஏற்பட்டிருக்குமென அறிகிறோம். இந்தத் தொல்லையை அவர்கள் நினைத்திருந்தால்போக்கியிருக்கலாம். அதாவது இனும்தாரி ஒழிப்பில் பாதிக்கப்படுகிறவர்களிடமிருந்து லஞ்சக் காசு வாங்கி டில்லிக்கு ஓடிவரும் சில அன்னக் காவடிகளுக்கு அவர்கள் பேட்டியும், வாதத்தை எடுத்துக்கூற சந்தர்ப்பமும் அளிக்காதிருந்தால் இந்தத் தொல்லையே ஏற்பட்டிருக்க முடியாது. மத்திய பார்லிமெண்ட் போர்டார் இதைச் செய்யத் தவறிவிட்டார்கள். அதன் விளைவுதான் இந்த ரகளைகளுக்கெல்லாம் காரணம். இந்த பிரஸ்தாப மசோதாவுக்கு சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சி ஏற்கனவே அங்கீகாரமளித்திருந்தும், சில மெம்பர்கள் இதற்கு நேர்மாறாக நடந்துவருகிறார்கள். மசோதாவை பட்டந்தட்ட அவர்கள் செய்துவரும் ஜாலவித்தைகளுக்கு கணக்கு வழக்கே இல்லை. சட்டசபைக் கட்சிக் கூட்டத்தில் பேசுவதோடு, வெளியேயும் அவர்கள் தகராறை மூட்டிவருகிறார்கள். இவர்கள் நோக்கமெல்லாம் மசோதாவை சாக அடிப்பதுதான். இந்த நோக்கம் நிறைவேறாது என்பது நிச்சயம். இது அந்த பிற்போக்குக் கும்பலுக்கே தெரியும். இருந்தும் ஏன் இப்படி வரட்டுக் கத்து கத்துகிறார்கள் என்று கேட்கலாம். அதற்கு வெள்ளிக் காசுகள் தண்ணீர்பட்ட பாடாய் நடமாடுவது தான் காரணம். இந்த வெள்ளிக் காசு புழக்கம் சற்று நின்றுவிட்டால், இந்த கும்பல் வாலைச் சுருட்டிக்கொண்டு உட்கார்ந்து விடும். அதுவரை இந்த பிற்போக்காளர் கதறத்தான் செய்வார்கள். தாராளமாகக் கதறுங்கள் என்று தான் இவர்களுக்கு சொல்ல வேண்டும்."

நிலைமையைக் கண்டு கோபம் கொண்டு, பெருச்சாளிகள், இலஞ்சம் பெறுவோர், அன்னக்காவடிகள், என்று, வரதாச்சாரி கம்பெனிமீது வசை பாடுகிறது காண்டீபம். வசை மொழி அவர்களை என்ன செய்துவிடும்! நிலைமையை, எப்படி இதனால் திருத்த முடியும்?

காங்கிரஸ் மேலிடத்திலிருந்து இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு தாக்கீது வந்து விட்டது—ஆகஸ்ட்டு பத்தாம் தேதிக்கு மேல், சென்னைக் காங்கிரஸ் கட்சி கூடி, மறுபடியும் தாக்கீதைப் பற்றி யோசிக்கப் போகிறது.

இந்த நிலைமை சரியா? முறையா? மேலிடம் என்று ஓர் அமைப்பு இருப்பதும் அதற்கு இங்குள்ள ஆளவந்தார்கள் அடங்கி நடப்பதும், என்—எந்த விதமான அரசியல் நீதியின்படி இது நடைபெறுகிறது? இந்த மாகாணத்தின் பெருவாரியான மக்களின் தீர்ப்புக்கு மாறாக நடந்து கொள்ளும்படி அதே மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளை வற்புறுத்துவது, சரியா?—இவைகளல்லவா காண்டீபம் கவனித்திருக்க வேண்டிய பிரச்னைகள்.

மேலிடம் என்றோர் அமைப்பும், முடிவான தீர்ப்புக் கூறும் அதிகாரம் அந்த அமைப்புக்கே உண்டு என்ற நிலையும் இருக்கும் வரை, வெள்ளிக் காசு பெற்றுக்கொண்டோ தங்க வளையங்களைப் பெற்றுக்கொண்டோ, சென்று, சாடி கூறி, சதி புரிய, ஏதாவதோர் கம்பெனி, அவ்வப்போது கிளம்பியபடிதான் இருக்கும்.

மாகாண சுயாட்சி—மக்களாட்சி என்பது, கேலிக் கூத்தாக்கப்படுகிறது—சேட்பார் காணோம்.

அமைச்சர்களின் திட்டங்களை ஆகாவழிகள் குலைக்கமுடிகிறது மேலிடத்தின் தயவினால், இதற்குப்பெயர் ஜனநாயகமாகுமா?

ஏன், இந்தநிலைமையை அனுமதிக்கிறார்கள்?

மேலிடம், அரசியல் நாணயத்தை விரும்பியிருந்தால், மக்களாட்சியில் அவர்களுக்கு மதிப்பு இருக்குமானால், ஒரு சிறு கூட்டம் சாடி கூறியதைக் கவனிக்கலாமா! போ! போ! போய் உன் மாகாண மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்—என்னிடம் முறையிட்டுப் பயன் இல்லை—நான் மாகாண சுயாட்சியிலே தலையிட முடியாது, என்றல்லவா, மேலிடத்

துத் தலைவர்கள் கூறியிருக்கவேண்டும்! கூறினரா அது போல்!

தொல்லை ஏற்பட்டதற்குக் காரணமே, "இலஞ்சக்காசு வாங்கி டில்லிக்கு ஓடிவரும் சில அன்னக் காவடிகளுக்கு அவர்கள் பேட்டியும், வாதத்தைஎடுத்துக்கூறசந்தர்ப்பமும் அளித்ததால்"—என்பதைக் காண்டீபம் கூறுகிறது—ஏன் மேலிடம், அன்னக்காவடிகளின் பேச்சுக்கு அவ்வளவு மதிப்பளிக்கிறது, அதிலும், அமைச்சரின் பேச்சை விட மேலானதாக, ஏன் அவர்களின் பேச்சை மதிக்கிறது?

'அன்னக் காவடிகள்' 'இலஞ்சக் காசுக்காக' டில்லிக்கு ஓடுகிறார்கள்—சரி—மேலிடத்தார் ஏன், இப்படிப் பட்டவர்களின் பேச்சை மதிக்கிறார்கள்—என்ன காரண !

வெள்ளிக் காசுகள், அன்னக்காவடிகளிடமே தங்கி விட்டனவா, இல்லை, அவர்கள் தபால்காரராகி, சேர்க்க வேண்டிய இடத்திலே கொண்டுபோய், வெள்ளிக்காசுகளைச் சேர்த்து விட்டனரா—மர்மம் என்ன! காண்டீபம் இதனை விளக்கக் கடமைப் பட்டிருக்கிறது—முடியுமானால்!!

போகட்டும், மேலிடத்தார்தான், இலஞ்சக் காசு பெறுகிற அன்னக் காவடிகளின் பேச்சில், எப்படியோ இலயித்து, மக்களின் தீர்ப்பை மதிக்க மறுத்து, அமைச்சரின் திட்டத்தைக் குலைக்கத் துணிந்துவிட்டனரே, அவர்களின்போக்குச்சரியல்ல என்பதும் காண்டீபத்துக்குத்தெரிகிறதே, தெரிந்த பிறகாவது, ஒரு வார்த்தை மேலிடத்தைக் கண்டித்து எழுதினதுண்டா—எழுதத் துணியுமா? மவுண்ட் ரோட் பெருச்சாளிகள்!—எவ்வளவு தாராளமாகவும் தைரியமாகவும் வீசிவிட்டது, வசைமொழியை!—இந்தத் தைரியத்திலே ஆயிரத்திலோர் பாகம், அந்த மேலிடத்தைக் கண்டிக்கக் கிளம்புமா!

சென்னை மாகாண சர்க்கார் சென்னை மாகாண மக்களால் அமைக்கப்பட்டிருக்கிறது—அந்தச் சர்க்காரின் திட்டம் இந்த ஜெமீன் இனும் ஒழிப்பு என்பது—இதிலே தயவு செய்து, தாங்கள் தலையிடவேண்டாம். எங்கள் உரிமையைப் பறிக்க வேண்டாம்—என்று தீர்மானம் நிறைவேற்ற, காண்டீபத்துக்கு அல்ல, அது பாவம் கொஞ்சம் சாரசாரமான எழுத்துகளை ஏந்திடும் ஏடு—அமைச்சர்கள், ஆற்றல் மிக்க காங்கிரஸ் தலைவர்கள், சட்டசபையினரால் முடியுமா என்றுகேட்கிறோம். நிறைவேற்றினால், அமைச்சர் நிலைக்கே ஆபத்து என்பது அவர்களுக்குத் தெரியும்!

இப்போதே, வரதாச்சாரி கம்பெனி, கேட்கிறதே, அமைச்சரையும் அவருடைய ஆதரவாளர்களையும் பார்த்து—காங்கிரஸ் மேலிடத்தின் கட்டளையை ஏற்றுக் கொள்ளப் போகிறீரா இல்லையா! அந்தக் கட்டளையை மீறி நடந்தால் என்ன நேரிடுமென்பதை அறிவீரா?—என்று கேட்டு, மிரட்டுகிறதே!! அமைச்சரும் பிறரும் கூட, "மேலிடமோ வேறிடமோ நாம், நமது மனச்சாட்சியின்படிதான் நடந்து கொள்வோம்—எமது உரிமையில் தலையிடும் எவருக்கும் இனி இடமளியோம்" என்று கூறுகின்றனர்.

மேலிடத்துக்கு, நாங்கள் முறையிட்டுக்கொள்வோம்—விளக்கம் கூறுகிறோம் — என்றும், முடிவில் மேலிடம் கூறுகிறபடிதான் நடந்து கொள்வோம் என்றுந்தான் கூறுகின்றனர்.

இந்த நடுக்கம், அந்த அன்னக் காவடிகள் பெறும் இலஞ்சக் காசை விடக்கேவலம் என்பதை, இவர்கள் அறிய மறுக்கிறார்களே!!

மேலிடம் என்றோர் அமைப்பு இருக்கும்—அதனிடம் ஒருகூட்டம் சாடி சொல்லப்போகும், மற்றோர் கூட்டம் விளக்கமுரைக்கும், இடையே மாகாண சுயாட்சி இருக்கும்! எவ்வளவு கேவலமான நிலை—சேவிக் கூத்து.

இந்தக்கேவலமான நிலையிலிருந்து இவர்களை விடுவிக்கச் செய்யும் முயற்சிதானே, நாம் திராவிடநாடு திராவிடருக்கு என்பது.

இந்த மாகாணத்து மக்களுக்கு, மேலிடத்தின் தாக்கீதுதான் முடிவான சட்டம் என்றால், மாகாண சர்க்கார் ஒருபெரிய ஜில்லாபோர்டு தானே—நிலையில்—தரத்தில்-திறத்தில! இதுவா மாகாண சுயாட்சி! காண்டீபம், வரதாச்சாரி கம்பெனி மீது சரம் தொடுத்து என்ன பயன்? இலக்குத் தெரியாது,வீரம் காட்டப்படுகிறது. நிலைமை தெரியாதவர்கள் நீதி பேசுகிறார்கள்! உரிமையைப் பறிகொடுக்கத் துணிந்தவர்கள், உள்ளூர்க்காரர்களின் கண்முன்,வீரர்களாக வேஷமிட்டுத் திரிகிறார்கள்! வீண்வேலை! வீரப்புக்குச் செய்யும் காரியம்!

மக்களின் உரிமையையும், ஏழை எளியோரின் நலனையும், சட்டசபையின் மானத்தையும், அமைச்சரின் அந்தஸ்தையும், கட்சியின் கண்ணியத்தையும், காப்பாற்ற வேண்டும் என்பதிலே கடுகளவாவது அக்கறையும், ரோஷமான உணர்ச்சியும் இருக்குமானால், காண்டீபமாகட்டும் பாசுபதாஸ்திரமாகட்டும் அவைகளை ஏந்தியுள்ள அரசியல் அர்ஜுனர்களாகட்டும், டில்லியை நோக்கி, சற்றே நிறுத்தும் பிள்ளாய்! இந்தச் சர்வாதிகாரத்தை ஏற்றுக் கொள்ளமாட்டோம்! என்று கூறத் துணிவு கொள்ளவேண்டும், முடியுமா! நாம், சந்தேகிக்கிறோம்.

✻


செங்கல்பட்டு டிஸ்டிரிக்டு ஜட்ஜு கோர்ட்டு

SCOP No. 52 of 1948.

தாயாரம்மாள்—மனுதார்

மதுராந்தகம் தாலுக்கா பழவூர் கிராமத்தில் 5—3—48ல் காலஞ்சென்ற தாஸு ரெட்டியார் கடன்கள் விஷயமாக அவருடைய மனைவியாள் தாயாரம்மாள் வார்சு சர்டிபிகேட்டுபெற, ஷை நெம்பரில் மனு கொடுத்து விசாரணை வாய்தா 20—8—48ல் போட்டிருக்கிறது. ஆக்ஷேபனையுள்ளவர்கள் அன்று கோர்ட்டில் தெரிவித்துக்கொள்ளலாம்.

பி. பி. பாஷியமய்யங்கார்,
மனுதார் வக்கீல்.
28-7-48, செங்கல்பட்டு

காஞ்சியில் சிறந்த புத்தகசாலை!
மாடர்ன் புக் ஸ்டால்

✻

அறிஞர்கள் பலரால்
தீட்டப்பட்ட எல்லா புத்தகங்களும்
கிடைக்குமிடம்:—

மாடர்ன் புக் ஸ்டால்,
105, ராஜ வீதி, காஞ்சிபுரம்.

# பழையவியாதியும்—புதுவியாதியும்

★

இக்கட்டுரை, கட்சிமாச்சரியத்தால் இந்தி எதிர்ப்பை நடத்துகிறார்கள் என்று, சில நாக்கில் நரம்பிலிகளால் கூறப்படுபவர்கள் எழுதியதல்ல. கட்சிமாச்சரியமற்றசாட்சாத் காங்கிரஸ் இதழான 'சிவாஜி'யில் 1—8—48-ல் வெளிவந்துள்ள இந்திக் கண்டனக் கட்டுரையே இங்கு தரப்படுவது. இக்கட்டுரை, இந்தி எதிர்ப்பாளரைப் பற்றிக் குறை கூறிக் கூச்சலிடும் கும்பலுக்குப் புத்தி புகட்டுமென்பதற்காகவே இதனை இங்கு வெளியிடுகிறோம்:—

'சென்ற வாரத்துக்கு முந்தைய வாரக்கட்டுரையில் சென்னை சர்க்காரின் இந்திக்கொள்கையிலிருந்து வரும் கொடிய தவறுகளை விரிவாக எடுத்துக் காட்டியதோடு, ஆங்கிலத்துக்கும், இந்திக்கும் உள்ள தாரதம்மியத்தையும் விளக்கியிருந்தோம்.

அந்தக் கட்டுரையில் விரிவாகச் சர்ச்சை செய்யப்படாத ஒரு விஷயத்தை இப்போது ஆராய விரும்புகிறோம்.

இந்தியைச்சுமத்தஆசைப்படுவதில் அடங்கியிருக்கும் இன உணர்ச்சியையும் இந்தி எதிர்ப்புக்கு இருக்கும் நியாயமான ஆதாரத்தையும் எடுத்துக்கூறியிருந்தோம்.

"இந்தியைக்கட்டாயமாக்கவில்லை, இரண்டாம் மொழியொன்றைத்தான் கட்டாயமாக்கினோம்" என்று சட்டசபைக் கேள்விககாலத்திலும், தனி அறிக்கைமூலமும் சென்னை சர்ககார் கூறியிருககிறது.

இன்னொரு சட்டசபைக் கேள்விக்காலத்தில் இவ்வாண்டு கல்வித் திடடத்தில் இரணடாம் மொழி கட்டாயமாயிருபபது முதல் பாரத்திலிருந்து மூன்றும்பாரம் முடியத்தான் என்றும், நான்காம் பாரம் முதல் ஆறும் பாரம் முடிய இரண்டாம் மொழியே கட்டாயமில்லை என்றும் கல்வி மந்திரியாரால் கூறப்பட்டிருக்கிறது.

இந்தப் புது பதில் அசட்டுத்தனமாகவும், ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கொள்கைக்குப் புறம்பாகவும் இருககும்.

முதலாவது, முதல் பாரம் முதல் மூன்றுவது பாரம் முடிய இரண்டாம் மொழி யொன்றைக் கற்கச் சொல்லிவிட்டு, அப்புறம் அதை விட்டுவிடலாம் என்று கூறுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது? அப்படி விட்டுவிடுவதற்காக எதற்கு ஒரு மொழி கற்கவேண்டும்? இதுவிளங்கவில்லை.

இரண்டாவதாக இந்தி அறிவு சென்னை மாகாண சர்க்கார் உத்தியோகங்களுக்கு விசேஷசலுகையாக பாவிக்கப்படும் என்றும், இரண்டாம் மொழி கட்டாயம்தான் என்றும் முதலில் கூறிவிட்டு பின்னர் நாலாம் பாரத்திலிருந்து இரண்டாம் மொழியே கட்டாயமில்லை என்று கூறுவதில் என்ன பொருள் இருக்கிறது?

இந்த விஷயத்தை சென்னை சர்க்கார் தெளிவாக விளக்கவேண்டும்.

* * *

இந்த இடத்தில் இந்தி அறிவை மாகாண சர்க்கார் உத்தியோகங்களுக்கு விசேஷ சலுகையாகக் கொள்வதின் அபத்தத்தை எடுத்துரைக்க விரும்புகிறோம்.

அகில இந்தியப்பொதுமொழியாக இருக்கவே இந்திக்கு அருகதையில்லை என்று நாம் வற்புறுத்தித் தெளிவாகக்கூறியிருக்கிறோம்.

அப்படியே இந்தியை இந்தியப் பொதுமொழியாகக் கொள்வதானாலும் (இது நமக்கு ஒப்புதலில்லை) மாகாண சர்க்கார் உததியோகங்களுக்கு அதை ஒரு சலுகையாக வைப்பதில் பொருள் எதும் காண முடியாது.

மாகாண அரசியலையும், கலவியையும் வினைநடவடிக்கைகளையும்பிராந்தியமொழியிலேயே நடத்துவதற்கான தீவிர முயற்சிகள் செய்யபபட்டு வருமகாலததில் இபபடி ஒரு விபரீதம் வந்து சேருவதானல் அதைக்கட்டாயம எதிர்த்தே தீர வேண்டும்.

மாகாண அரசியலுக்கு இந்தி அறிவு எதற்கு? மாகாண அரசியல நடவடிக்கைகளில் இந்திக்கு ஸ்தானம எங்கிருக்கிறது?

* * *

இந்தியை இங்ஙனம் பறைமுகமாகக் கட்டாயமாக்குவதனுல் புதிய வியாதி ஒன்று நம்மைப் பிடித்துக் கொள்ளச்சூழ்ச்சிசெய்வதாகிறது.

ஏற்கனவேயே, நமது பொதுவாழ்விலும், கலாசாரத்திலும் ஆங்கில வியாதி நம்மைப்பற்றிக்கொண்டிருக்கிறது. சந்தர்ப்பங்களாலும், ஆட்சிக்கொடுமையாலும் ஏற்பட்ட வினை இது. இந்த வியாதியை அகற்றிவிட வேண்டுமென்று நாம் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

இந்த நிலையில் இந்தியென்ற புது வியாதியைப் புகுத்தி நமது மொழியையும், கலாச்சாரத்தையும் குட்டிச்சுவராக்குவதை யாரும்பொறுக்க முடியாது.

ஆங்கில வியாதி நமது கலாச்சாரத்தைப்பற்றியிருக்கிறது என்று கூறும்போது, நாம் நம்கொள்கையை மாற்றிக்கொண்டுவிட்டதாக யாரும் தவறாக எண்ணக்கூடாது. ஆங்கிலத்துக்கு அகில இந்திய மொழியின் ஸ்தானத்தைத்தான் நாம் கொடுத்திருக்கிறோம். மாகாண நடவடிக்கைகளிலிருந்து அதையும் விலக்க வேண்டுமென்பதுதான் நம் கருத்து.

இப்போதிருக்கும் நிலையில், விரிவான திட்டங்கள் வகுத்து நமது கல்வி, அரசியல் துறைகளிலும் நமது மொழியையே கருவியாக்க முடியுமுன்னர், திட்டமில்லாத அவசரமாற்றங்கள் செய்வதால் ஏற்படும் குழப்பத்தைத் தவிப்பதற்காக, தற்போதிருக்கும் கல்வி, அரசியல் துறைகளை மாற்றுமல் சிறிதுகாலம் கடைப்பிடிக்கலாம் என்றுதான் நாம் கூறுகிறோம். அந்த அளவில் மாகாணத்துறையில் நிலவிவரும் ஆங்கில வியாதியை குறைந்தபட்ச வியாதியாகப் பொறுத்துக்கொண்டு, இந்தி என்னும் புது வியாதி வேண்டாம், என்றுதான் நாம் கூறுகிறோம்."

"சிவாஜி"

---

## வெளியூர்த் தோழர்களுக்கு வேண்டுகோள்

"விடுதலை" மூலம் வேண்டுகோள் விடுக்கும் வரையில் பள்ளி மறியலுக்காக வெளியூர்த் தோழர் யாரும் சென்னைக்குப் புறப்பட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சி. என். அண்ணாதுரை
1-வது சர்வாதிகாரி

# இந்தி எதிர்ப்புப்போர்

## 10-8-48ல் துவக்கப்படும்

—✲—

ஹிந்தியை எதிர்த்து நேரடி நடவடிக்கையிலிறங்கத் திராவிட கழகம் முடிவு செய்து விட்டது. முதல் போராட்டம் ஆகஸ்ட் 10-ந் தேதியன்று ஆரம்பமாகும். ஹிந்தி எதிர்ப்புப் போரின் முதல் சர்வாதிகாரி தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் ஆவார்.

பள்ளிகளில் மறியல் செய்வது, படை, ஊர்வலம், பொதுக்கூட்டம், மந்திரிகளைப் பகிஷ்கரித்தல் முதலியவைகளை நடத்தி மக்கள் தம் உணர்ச்சியைக் காட்டிக்கொள்வது, அரசியலார் மேற்படி காரியங்கள் நடைபெறாது செய்யத் தங்கள் தடையுத்தரவுப் பாணத்தைப் பிரயோகித்தால் அவைகளை மீறுவது என்பதே நேரடி நடவடிக்கைத் திட்டமாகும்.

ஐதராபாத் மக்கள் நடத்திவரும் பொறுப்பாட்சிக் கிளர்ச்சியை ஆதரித்தும், ரஸாக்கர் அட்டூழியங்களை வன்மையாகக் கண்டித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2—8—48 திங்கள் காலை 10-30 மணிக்கு மத்திய திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி அவசரக்கூட்டம் சென்னை மவுண்ட் ரோடு மீரான் சாயபு தெரு 1-ம் எண் இல்லத்தில் நடைபெற்றது. கமிட்டித் தலைவர் தோழர் டி. பி. வேதாசலம் அவர்கள் தலைமை வகித்தார்.

கீழ்க்கண்டவர்கள் வந்திருந்தனர்:-

பெரியார் ஈ. வெ. இராமசாமி, தி. பொ. வேதாசலம், கே. கே. நீலமேகம், சி. என். அண்ணாத்துரை, ஈ. திருநாவுக்கரசு, டா. சீதாபதி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஏ. சித்தையன், டாக்டா் தர்மமாம்பாள், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், சி. பு. ?. அரசு, என். வி. நடராஜன், என். ஜீவரத்தினம், சி. தங்கராஜ், கே. லிங்கசாமி, ஆ. திராவிடமணி, எஸ். நீதிமாணிக்கம், சி. புனுசாமி, வி. ரங்கராஜ், ஜி பராங்குசம், கே. ஏ. மணியம்மையார், பி. பழனிசாமி ஆகியோர்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

1. ஹைதராபாத் மக்கள் நடத்தி வரும் பொறுப்பாட்சிக் கிளர்ச்சியை இக்கமிட்டி ஆதரிப்பதுடன் அதற்கு விரோதமாக அங்கு நடத்தப்படும் அடக்குமுறையையும் ரசாக்கர்களுடைய அக்கிரமச் செய்கைகளையும் இக்கமிட்டி வன்மையாகக் கண்டிக்கிறது.

2. பெத்தாம்பாளையம் பி. பழனிச்சாமி அவர்கள் மத்திய கமிட்டி உறுப்பினராக கோ ஆப்ட் செய்து கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

3 அரசாங்கம் "விடுதலை பத்திரிகைக்கு ஜாமீன் கேட்டதை உணர்ந்தும் பெரியாரின் அறிக்கையைக் கண்டும் பொதுமக்கள் பண உதவி செய்ததை இக்கூட்டம் பெரிதும் பாராட்டி நன்றி செலுத்துகின்றது.

4. திருச்சியில் 23-6-48-ல் நடந்த நிர்வாகக்கமிட்டித் தீர்மானப்படி தலைவர் பெரியாரவர்கள் ஜில்லாக்கள்தோறும் சென்று, மக்கள் காட்டிய உணர்ச்சியையும் ஆதரவையும் கண்டு அதைத் தெரிவிக்கும் முறையில் அறிவித்த அறிக்கையைக் கவனித்து இக்கமிட்டி மகிழ்ச்சியடைகின்றது.

5. இந்தி எதிர்ப்பு நேரடி நடவடிக்கையில் ஈடுபடப் பல பாகங்களிலிருந்தும் இதுவரை பல ஆயிரக்கணக்கான மக்கள் ஆண்களும், பெண்களுமாகத் தங்கள் தங்களது மனப்பூர்வமான ஆர்வத்தைக் காட்டிக் கையெழுத்திட்டுச் சம்மதம் தெரிவித்திருப்பதை இக்கூட்டம் பாராட்டுகின்றது.

6. தமிழ் நாட்டில் ஒன்று முதல் ஆறாவது பாரம் வரையில அரசாங்கம் இந்தி மொழியைக் கட்டாயமில்லையென்று சொல்லிவிட்டு, ஒரு சிலர் தூண்டுதலால் 1-முதல் 3-ம் பாரம் வரை அவசியக் கட்டாயமாகச் செய்திருப்பதைக் கண்டு இக் கமிட்டி கண்டிக்கின்றதுடன், ஒருவகையிலும் இஷ்டபாடமாகவோ, கட்டாய பாடமாகவோ, இந்தி மொழி மேற்கண்ட வகுப்புக்களில் பாடமாக வைக்கக் கூடாதென்று தீர்மானிக்கிறது.

7. இந்தக் கருத்தைச் சென்ற சுமார் ஒரு மாத காலமாகப் பொதுமக்கள் தெரிவித்து வந்தும், மாநாடு, பொதுக்கூட்டம் கூடித் தீர்மானித்து வந்தும் அரசாங்கம் சிறிதும் ஏற்றுக்கொள்ளாமல் பொது மக்களை ஏமாற்றும் வகையில் பலப் பல சொல்லி அரசாங்கம் தங்கள் கருத்தையே நிலைநாட்டிவருவதால் இந்தத் திட்டத்தை மாற்றுவதற்காக திராவிடர் கழகத்தாரை நேரடி நடவடிக்கையில் இறங்கும்படி அரசாங்கம் நிர்ப்பந்தப் படுத்திவிட்டபடியால் கழகம் நேரடி நடவடிக்கை நடத்த அடியிற்கண்டபடி திட்டம் வகுத்துள்ளது:—

1 பள்ளிகளில் மறியல் செய்வது.

2. படை, ஊர்வலம், பொதுக் கூட்டங்கள், மந்திரிகளை பகிஷ்கரித்தல் முதலியவைகளின் மூலம் மக்களின் எதிர்ப்பு உணர்ச்சியைக் காட்டுவது.

3. இக் காரியங்களுக்குச் சர்க்கார் தடை விதித்தால் அவைகளை மீற வேண்டியது.

4. இவைகளைப் பலன் உண்டாக்கும்படி நிறைவேற்ற, செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது.

முதல் நடவடிக்கையாக,-ஆகஸ்டு 10-ந் தேதி முதல் சென்னையில் முக்கியமாய், தொண்டை மண்டலம் உயர்தரப்பள்ளி அல்லது இந்து தியாலஜிகல உயர்தரப் பள்ளியில் இந்தி படிக்கச் சொல்லப்படும் பிள்ளைகளைச் சமாதான முறையில் படிக்கச் செல்லவேண்டாமென்று மறியல் தொடங்குவதென்று தீர்மானிக்கின்றது.

இந்த மறியலைத் தொடங்குவதற்கு முதற்படைத் தலைவராக (சர்வாதியாக) இருந்து மறியலைத் துவக்கி நடத்தும்படி இக்கமிட்டி தோழர் சி. என். அண்ணாத்துரை எம். ஏ. அவர்களை நியமிக்கின்றது.

●

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi Street, Conjeeveram.